விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 22 சனிக்கிழமை (08.11.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 324

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# ஜனாதிபதி சமர்ப்பித்த மனு 2 நாட்களில் விசாரணை முடிபு

## கேள்வி எழுப்புகிறது சட்டத்தரணிகள் சங்கம்


(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தான் மூன்றாவது முறையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது சம்பந்தமாக ஆலோசனை கேட்டு உச்சநீதிமன்றத்தில் சமர்ப்பித்த மனு மீது உச்ச நீதிமன்றம் 2 நாட்களில் விசாரணைகளை முடித்தது எப்படி என இலங்கை வழக்கறிஞர்கள் ஒன்றியம் கேள்வி எழுப்பியுள்ளது.

20 ஆம் பக்கம் பார்க்க



## நேற்றும் இரு சடலங்கள் மீட்பு



(பதுளை)

கொஸ்லந்தை, மீரியபெத்தையில் ஏற்பட்ட மண்சரிவில் புதையுண்டவர்களை மீட்கும் பணிகள் பத்தாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

மண்சரிவில் சிக்குண்டு உயிரிழந்த இருவரின் சடலங்கள் நேற்று மதியம் மீட்கப்பட்டதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

20 ஆம் பக்கம் பார்க்க

## சென்னை சென்றார் முதலமைச்சர்

(சென்னை)

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சென்னையை சென்றடைந்தார்.

சென்னை விமான நிலையத்தை சென்றடைந்த வட மாகாண முதலமைச்சர் அங்கிருந்து நேராக புறப்பட்டு சென்றுவிட்டதாகவும் செய்தியாளர்களையும் அவர் சந்திக்க மறுத்துவிட்டதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

20 ஆம் பக்கம் பார்க்க

## மீனவர்களுக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

ராமேஸ்வரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை பகுதிகளிலிருந்து இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில கடந்த செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதங்களில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 24 மீனவர்களையும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிமன்று உத்தர விட்டது.

கடந்த

19 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா விசாரணைகளின் மீது இலங்கை அரசு தாக்குதல்

### மனித உரிமை ஆணையாளர் குற்றச்சாட்டு

(நியூயோர்க்)

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு நடத்தும் புலன்விசாரணைகளின் நம்பகத் தன்மை, நேர்மை ஆகியவற்றின் மீது இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தி வருவதாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையர் ஷெயித் ராத் அல் ஹுசைன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்த புலன் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு தர விளையும் தனிநபர்களையும் இலங்கை அரசாங்கம் தடுப்பதாகவும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இந்த விசாரணைக்கு எதிரான தவறான தகவல்களைக் கூறி அதனை தாக்குவது, அந்த விசாரணைக்கு குழுவுக்கு சாட்சியமளிக்க விரும்புவர்களை தடுப்பது ஆகியவை, இந்த விசாரணைக்கான ஆணையைப் பெற்றுள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவை அவம

20 ஆம் பக்கம் பார்க்க

## ரணில் இல்லை மகிந்த குழப்பம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார் என மகிழ்ச்சியில் இருந்த ராஜபக்ஷவினர், அவர் போட்டியில் இருந்து விலகி பொது வேட்பாளரை நிறுத்தப் போவது உறுதியானதால் ராஜபக்ஷவினர் பெரும் குழப்பத்தில் இருப்பதாக சிங்கள இணையத்தளம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

இதனால், எப்படியாவது தேர்தலில் வென்றாக வேண்டும் என்பதற்காக

19 ஆம் பக்கம் பார்க்க

## நாட்டு மக்களின் ஜாதகம் பலமாகவே உள்ளது!

### ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது ஜாதகம் சிறப்பாக இருப்பதால அடுத்த தேர்தலில் வெற்றி பெற்றுவிடலாம் என்று எண்ணிக்கொண்டிருப்பதாகவும் தேர்தலில் மகிந்தவின் ஜாதகத்தை விட மக்களின் ஜாதகம் பலமானது எனவும் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் ஜாதகத்தை பலப்படுத்தும் அளவுக்கு நாட்டு மக்கள் துரதிர்ஷ்டசாலிகள் இல்லை.

தற்போது எமக்கு பாரிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. கட்சிகளின் நிலைப்பாடுகளுக்கு வரையறைப்பட்டாது. அதில் இருந்து தூரச் சென்று அந்த சிறைகளில் இருந்து விலகி, மக்களுக்காக முன்னோக்கி செல்லும் யுகம் உருவாகியுள்ளது.

20 ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்காவின் குற்றச்சாட்டை வரவேற்றார் எரிக் சொல்ஹெய்ம்

(கொழும்பு)

ஐ.நாவுக்கு ஒத்துழைப்பு வழங்குவோரை மௌனமாக்க இலங்கை முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக குற்றம் சுமத்தி அமெரிக்கா வெளியிட்ட கருத்தை நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் வரவேற்றுள்ளார்.

ஐ.நாவுக்கு ஒத்துழைப்பு வழங்குவோரை மௌனமாக்க இலங்கை முற்படுவதாகவும், இது ஐ.நா மீதான [illegible]



கொள்ள வேண்டும் என்றும் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுக்கான அமெரிக்கப் பிரதிநிதி கீத் ஹாப்பர் கடந்த புதன்கிழமை தனது டுவிட்டர் பதிவில் எச்சரித்திருந்தார்.

இந்நிலையில், இது தொடர்பில் டுவிட்டரில் தனது கருத்தைப் பதிவு செய்துள்ள நோர்வேயின் முன்னாள சமாதானத் தூதுவர் எரிக் சொல் ஹெய்ம், ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுக்கான அமெரிக்கப் பிரதிநிதியின் கருத்து மிகவும் சரியானது என்று வரவேற்புத் தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தினால் மேற்

19 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரத்தில் இருந்து வீழ்ந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். வல்வெட்டித்துறை புற்றாலை பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இளநீர் பிடுங்க மரத்தில் ஏறியவர், வலிப்பு ஏற்பட்டு கீழே வீழ்ந்து உயிரிழந்துள்ளதாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேயிடத்தை சேர்ந்த இராசநாயகம் இந்திரதாஸ் (வயது 55) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மரத்தில் ஏறியவுடன் வலிப்பு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து இவர் கீழே வீழ்ந்த போது கிணற்று கட்டுடன் அடிபட்டு படுகாய மடைந்தார்.

தொடர்ந்து வைத்தியசாலைக்கு எடுத்து செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

# திருப்பதிக்குச் சென்ற பிரதமருக்கு எதிர்ப்பு

இந்தியாவின் திருப்பதிக்கு விஜயம் செய்த இலங்கை பிரதமர் டி.மு.ஜயரத்னவிற்கு எதிர்ப்பு தெரிவித்து கறுப்புக் கொடி காட்ட முயற்சித்த மதிமுகவினர் சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்தை சேர்ந்த, ஐந்து மீனவர்களுக்கு இலங்கை நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கை பிரதமர் திருப்பதிக்கு சென்றுள்ளார்.

இந்நிலையில் திருத்தணியில் இருந்து மல்லை சத்யா தலைமையில் மதிமுகவினர் திருப்பதிக்கு பயணம் மேற்கொண்டனர்.

அப்போது மல்லை சத்யா தலைமையில் ஊர்வலமாக புறப்பட்ட 100க்கும் மேற்பட்ட மதிமுகவினரை பொலிஸார் தடுத்து நிறுத்தி கைது செய்தனர்.

இலங்கை பிரதமர் டி.எம்.ஜயரத்ன, நேற்று திருமலைக்கு சென்றார். இலங்கை பிரதமர் வந்து, திரும்பும் வரை ரேணிகுண்டா விமான நிலையத்தில் இருந்து திருமலை வரை பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

வெடிகுண்டு அகற்றும் படையினரும், மோப்ப நாய் பிரிவினரும், திருமலை மலை பாதையில சோதனையில் ஈடுபட்டதாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (எ-11)

# பாப்பரசரின் பிரார்த்தனைகளில் இலட்சக்கணக்கில் மக்கள்!

## திரட்டுவதற்கு நடவடிக்கை

புனித பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் இலங்கை விஜயத்தின் போது நடைபெறும் பிரார்த்தனை வைபவங்களுக்கு லட்சக் கணக்கில் மக்களைத் திரட்ட முடிவெடுக்கப் பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி 13-ம் திகதி இலங்கை வரும் புனித பாப்பரசர் பிரான்சிஸ், 14-ம் திகதி காலை காலிமுகத்திடலில் பிரார்த்தனை வைபவமொன்றை நடத்தவுள்ளார்.

இந்த வைபவத்தில் சுமார் ஐந்து லட்சம் பேர் அளவிலான கிறிஸ்தவர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேபோன்று மன்னார் மடுவில் அமைந்துள்ள பேராலயத்தில் பாப்பரசரின் பிரார்த்தனை வைபவம் 14-ம் திகதி மாலை இடம் பெறவுள்ளது.

இதிலும் வடக்கில் வாழும் கிறிஸ்தவர்களில் இருந்து குறைந்தது ஐந்து லட்சம் பேரளவிலாவது கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பாப்பரசரின் பிரார்த்தனைக் கூட்டங்களில பெருமளவான பொதுமக்களின் வருகையை உறுதிப்படுத்துவது தொடர்பில் மறைமாவட்டங்கள் வழியாக அனைத்து கிறிஸ்தவ ஆலயங்களுக்கும் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பாப்பரசரின் வருகையின் போது அவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஏனைய மதத் தலைவர்கள் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

கொழும்பு பேராயர் அலுவலக ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினியை மேற்கோள் காட்டி திவயின பத்திரிகை இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. (எ-11)

# 'சமாதான தர்மம்' ஆன்மீக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சமாதான தர்மம் எனும் விடயம் பற்றி ஆன்மீக சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இச் சொற்பொழிவினை ஓய்வுபெற்ற அஞ்சல் பாடசாலை அதிபர் ரி.ரி.சண்முகநாதன் வழங்குவார். (எ-7)

# பட்டதாரிப் பயிலுநர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிப் பயிலுநராக நியமனம் பெற்றுள்ள உயர் தேசிய பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 9.30 மணிக்கு யாழ்.நாவலர் வீதியில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் கலந்துரையாடலில் உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகளின் எதிர்கால நிலைகள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து பட்டதாரிப் பயிலுநர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் மேலதிக விரங்களுக்கு 0778693873 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# இரண்டு விடுதிகளுக்கு நேற்று சீல் வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சாவகச்சேரி பகுதியில் விபசாரத்தில் ஈடுபட்ட பெண் கைது செய்யப்பட்ட இரண்டு விடுதிகளுக்கும் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய, நகரசபையினால் சீல் வைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட நகரத்தின் மத்தியில் அனுமதியின்றி இயங்கி வந்த மேற்படி விடுதிகள் இரண்டிலிலும் விபசார நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் பெண்கள் உட்பட அறுவரை கடந்த 5 ஆம் திகதி புதன்கிழமை கொடிகாமம் பொலிஸார் கைது செய்தனர்.

விடுதியை சுற்றிவளைத்து, விபசாரத்தில் ஈடுபட்ட 32 வயதுடைய பம்பலப்பிட்டியை சேர்ந்த பெண், பெண்ணை விபசாரத்திற்காக அழைத்து வந்தவர், விடுதி முகாமையாளர், விடுதி உதவியாளர் மற்றும் இரண்டு வாடிக்கையாளர்கள் ஆகியோரையே கைது செய்ததாக பொலிஸார் இதன்போது தெரிவித்தனர்.

இந்நிலையில் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைய நேற்று மேற்படி விடுதிகள் இரண்டும் நகரசபையினரால் சீல் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சாவகச்சேரி பகுதியிலுள்ள விடுதியொன்றில் விபசார நடவடிக்கை நடைபெற்று வருவதாகவும் இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லையெனவும் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து, விருந்தினர் விடுதியில் சோதனை நடத்துமாறு கொடிகாமம் பொலிஸாரிற்கு நீதவான் உத்தரவிட்டார்

அதற்கமைய விருந்தினர் விடுதியை சுற்றிவளைத்த கொடிகாமம் பொலிஸார் மேற்படி நபர்களை கைது செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

# இந்து குருமார் ஒன்றியத்தினர் பதுளைக்குப் புறப்பட்டனர்

## உதவிப் பொருட்களுடன்




(யாழ்ப்பாணம்)

பதுளை கொஸ்லந்தையில் இடம்பெற்ற மண்சரிவின் காரணமாக பாதிக்கப்பட்ட மலைய உறவுகளுக்கான உதவி மற்றும் ஆன்மீக உரையாற்றுகை மற்றும் நலன் வேண்டுதல் போன்றவற்றுக்காக சர்வதே இந்துகுருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 10 இந்து குருமார்கள் நேற்றையதினம் பதுளைக்கு புறப்பட்டுள்ளனர்.

மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு வழிபாடு மேற்கொண்டு அவர்களிற்கு ஆன்மிக உரைவழங்கி நூல் கட்டுதல் மற்றும் உதவிப் பொருட்களினை வழங்குவதற்காகவே அவர்கள் பதுளை சென்றுள்ளனர்.

சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவசிறி சபாவாசுதேவக் குருக்களின் தலைமையில் நேற்று பி.ப 6.30 மணியளவில் வண்ணார்பண்ணை சிவன்கோவிலிருந்து பதுளை சென்ற இக் குழுவிற்கு இ-சிற்றி நிறுவனத்தினர், கரவெட்டி வருத்தப்படாத வாலிபர் சங்கம், கோண்டாவில் நியூ வாரியர்ஸ் ஆகியோர் ஆதரவு வழங்கியிருந்ததோடு பாதிக்கப்பட்ட மக்களிற்கு பொருட்களினையும் வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் வட மாகாண சபையின் உறுப்பினர் பா.கஜதீபன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (எ-4)

# குளிர்பான உற்பத்தியாளர்கள் திங்களன்று போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட குளிர்பான உற்பத்தி நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை போராட்ட ஊர்வலம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக யாழ்.மாவட்ட உப உணவு மற்றும் குளிர்பான உற்பத்தியாளர்கள் சங்கம் நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக சங்கத்தினர் கருத்து தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் சிறுகைத்தொழில் முயற்சியாளர்களினால் நடத்தப்பட்ட ஐஸ் கிறீம், யூஸ் மற்றும் உப உற்பத்தி ஆகியவை செய்யும் 59 உற்பத்தி நிலையங்கள் வட மாகாண பிராந்திய சுகாதார பணிமனையினரால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் இந்நிலையங்களில் வேலைசெய்த 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட ஊழியர்கள் நே டியாக பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர். வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தை சந்தித்து இது தொடர்பாக பேசியிருந்தோம்.

மூன்று கட்டமாக பிரித்து படிப்படியாக திருத்த வேலைகளை செய்யுமாறும் பின்னர் வேலைகளை ஆரம்பிக்குமாறும் கூறியிருந்தார்.

குறைபாடுகளை நிவர்த்தி செய்திருந்தும் மீண்டும் மீண்டும் குறைபாடுகளை கூறி இயங்கவிடாமல் தடுக்கின்றார்கள்.

அதனால் எமது வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டு இருப்பதனால் சம்பந்தப்பட்டவர்கள் இதற்குரிய தீர்வை பெற்று தருமாறு கோரி கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (எ-4)

"லக்கி லொத்தோ" இன்
அதிர்ஷ்டசாலி: No.147, விசேட
அதிர்ஷ்ட இலக்கங்கள்: No.031, No.038, No.082, No.144, No.200
(சி-8995)

மருந்தாளர் தேவை
பிரபலமாக இயங்கிவரும் மருந்தகத்திற்கு மருந்தாளர் (Pharmacist), உதவியாளர்கள் (Helpers) தேவை.
தொடர்புகளுக்கு :
0714292827
(சி-8993)

இறைச்சிக் கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் மற்றும் கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு நியாயமான விலையில் காலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
நாய்க்கான கோழியிறைச்சி விற்பனைக்குண்டு
190/-
இப்போது கோழிப் பாகங்களும் (Chicken Parts) பெற்றுக் கொள்ளலாம்
நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொஸ்கோ வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல்ஜி.ஏ.சந்திரசிறியும் கௌரவ விருந்தினராக யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜஸ்டின் பி.ஞானப்பிரகாசமும் சிறப்பு விருந்தினராக கல்கமுவ நீர்ப்பாசனத்துறை திணைக்களப் பொறியியலாளர் மோர்னன் வேதநாயகமும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ-5)

# தாவடி வேத விநாயகர் ஆலயத்தில் பெறுமதியான பொருட்கள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். தாவடி வேத விநாயகர் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த பெறுமதி வாய்ந்த குத்து விளக்குகள் மற்றும் பல ஆயிரம் ரூபா பெறுமதியான பித்தளைப் பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்திருட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

பாதுகாப்பாக பூட்டப்பட்டிருந்த கதவுகளை உடைத்து இப்பொருட்கள் திருடப்பட்டுள்ளன என ஆலய நிர்வாகத்தினரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வழக்கமாக பூஜை செய்ய கோவிலுக்கு சென்ற பூசகர் கதவு உடைக்கப்பட்டிருப்பதை பார்த்து அதிர்ச்சியடைந்த நிலையில் கோவில் நிர்வாகத்தினருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து ஆலய நிர்வாகத்தினால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ் ஆலயத்தில் சில மாதங்களுக்கு முன்னர் உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது எனவும் தெரிய வந்துள்ளது. (இ-7-23)

# பதவியேற்பு

சுன்னாகம் றோட்டரக் கழகத்தின் 20 ஆவது பதவியேற்பு வைபவமும் வருடாந்த ஒன்றுகூடலும் இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணி முதல் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

றோட்டரட் கழகத் தலைவர் செ.கஜேந்திரா தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் புதிய நிர்வாக சபை பதவியேற்பு செயற்றிட்டங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் இடம்பெறவுள்ளன. (இ-7-23)

## யாழிலிருந்து மன்னார் வரை இ.போ.ச. பேருந்துச் சேவை

அரச உத்தியோகத்தர்களின் நலன் கருதி யாழ். மத்திய பேருந்து நிலையத்திலிருந்து இன்று முதல் தினமும் காலை 5 மணிக்கு நாவற்குழி, தச்சன்தோப்பு, தனங்கிளப்பு, சங்குப்பிட்டி ஊடாக மன்னார் வரை இலங்கை பேருந்துச் சேவை இடம்பெறவுள்ளதாக பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (இ-5)

# சிறப்புக் கருத்துரையுடன் யோகா பயிற்சி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.யோக அரங்கத்தினர் நடத்தும் மாலைநேர யோகா பயிற்சிக்கான அறிமுக நிகழ்வு நல்லூர் தேரடி அருகே 63 நாயன்மார்கள் குருபூசை மடத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அரச விருது பெற்ற பிரபல சோதிடர் வி.ஏ. சிவராசா சோதிடமும் யோகாசனமும் என்னும் தொனிப்பொருளில் சிறப்புக்கருத்துரையை வழங்குவார். யோகா பயிற்சிகள் மாலை 5 மணி தொடக்கம் 6 மணிவரை ஒரு மணி நேரம் இரண்டு மாதங்கள் தினமும் நடைபெறும். சூரிய நமஸ்காரம், யோகாசனம், பிராணாயாமம், தியானம், மற்றும் தளர்வுப் பயிற்சிகள் அனுபவமுள்ள ஆசிரியர்களால் சிறப்பாக பயிற்றுவிக்கப்படுவதுடன் கையேடுகளும் யோகாசன செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும். ஆர்வமுள்ள அனைவரும் இணைந்து பயன்பெறமுடியுமென்று யாழ். யோக அரங்கத்தினர் அறிவித்துள்ளனர். (இ)

# பெயர் மாற்றம்

உடையார் கட்டு வடக்கு சுதந்திரபுரம் வெள்ளப்பள்ளம் வீதியில் வசிக்கும் 841574001V எனும் அடையாள இலக்கமுடைய நாகமுத்து சத்தியம் என்று இதுவரை வழங்கப்பட்டு வந்த எனது பெயரை இன்று தொடக்கம் நாகமுத்து மதன் என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதனையும் தொடர்ந்து இப்பெயரையே சகல ஆவணங்களிலும் பயன்படுத்துவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
மதன்.

(சி-8991)

# வீட்டுத் திட்ட வீடுகள் கையளிப்பு

யாழ். கைதடி மேற்கில் உள்ள வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்களுக்கான 3 ஆவது வீட்டுத்திட்ட வீடுகள் கையளிக்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இவ்வீட்டுத்திட்ட வீடுகளானது கைதடி மேற்கு சரஸ்வதி சர்வதேச அமைப்பின் நிதிப்பங்களிப்புடன் கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தினரால் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது.

லயன்ஸ் ஓய்வு நிலை அதிபர் ப.செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பண்பாட்டு இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் எஸ்.துரைராஜா கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7-134)

# சாவகச்சேரி இந்துவின் பரிசளிப்பு விழா இன்று

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட பீடாதிபதி பேராசிரியர் சி.சிறிசற்குணராசா கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் எஸ்.கிருஸ்ணகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது மாணவர்களுக்கான பரிசில்களை பேராசிரியர் சி.சிறீசற்குணராசாவின் பாரியாரும் யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலத் துறை மொழியியல் தலைவர் திருமதி.சி.வராணி சிறீசற்குணராசா வழங்கவுள்ளார். (இ-7)

# பஜனை நிகழ்வு

உலகம் முழுவதும் அமைதியும் சாந்தியும் நிலவ வேண்டும் எனும் நோக்கில் உலகின் 175 நாடுகளிலுமுள்ள பல்லாயிரக்கணக்கான சாயி நிலையங்களில் ஒரே நேரத்தில் இடம்பெறவுள்ள 24 மணி நேர பஜனை நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6 மணிவரை யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (இ-5)

# நுளம்பினால் பரவும் நோய்கள் குறிப்பாக டெங்கு, மூளைக்காய்ச்சல், மலேரியாவை தடுக்கும் முறைகள் தற்சமயம் டெங்கு வைரஸ் நோயிலிருந்து பாதுகாக்க நீங்கள் செய்ய வேண்டியவை என்ன.....?

சில முக்கிய தகவல்கள், வழிமுறைகள் இவை:-
தெரிந்து கொள்ளுங்கள்.....

யாழ்ப்பாண குடாநாட்டில் டெங்கு,வைரஸ் நோய் பரவும் சாத்தியம் அதிகரித்து வருவதாக சுகாதார வைத்தியப் பகுதியினர் மக்கள் கவனத்தை ஈர்த்துள்ளனர். இது குறித்து மக்கள் விழிப்புணர்வுடனும், எச்சரிக்கையுடனும்,செயற்பட வேண்டிய அவசரமானதும், அவசியமானதுமான தேவை எழுந்துள்ளது.

**டெங்கு தொற்று என்பது என்ன?**

இது நுளம்பினால் பரப்பப்படும் ஒரு வைரஸ் நோய்.

இது இரு வகையாக வெளிப்படும்.

அ)டெங்கு காய்ச்சல் (D.S) ஆ)இரத்தத் தாக்கத்தை உண்டாக்கும் டெங்கு காய்ச்சல் (Dhs)

**டெங்கு காய்ச்சலின் குணங்குறிகள்**

அ) சடுதியாக ஏற்படும் காய்ச்சல் ஆ) கடுமையான தலையிடி

இ கண்ணின் பிற்பகுதியில் நோ ஈ) தசை,எலும்பு,மூட்டுக்கள் போன்றவற்றில் கடும் நோ.


(தொடரும்)

**வைத்திய கலாநிதி**
**இ. தெய்வேந்திரம்**

# இராசி பலன்

8.11.2014
(ஐப்பசி 22, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை- 6.00 மணிக்கு
துதியை பின்னிரவு 3.12 மணிவரை
கார்த்திகை பிற்பகல் 4.08 மணிவரை
இராகுகாலம்-9.05-10.35 மணிவரை
சுபநேரம் 3.05-4.35 மணிவரை

வளவன்

**மீனம்**

பகை விலகி பாசம் கூடும் நாள், முயற்சிகளில் எதிர்பார்த்த சில நல்ல திருப்பங்கள் ஏற்படலாம், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம்.

**மேடம்**

காலையிலேயே நல்ல தகவல்கள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த வேலைகளில் கூட வெற்றி கிடைக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**இடபம்**

பெருமைகள் வந்து சேர பெருமானை வழிபட வேண்டிய நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனம் கண்டு கொள்வீர்கள்.

**மிதுனம்**

எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலையநேரிடலாம், நீங்கள் சந்திக்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், செலவுகள் அதிகமாகும்.

**கும்பம்**

நல்ல தகவல்கள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தாய் வழி உறவினர்களால் நன்மையுண்டு, புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

**கடகம்**

பயணங்கள் கைகூடும், வருமானம் அதிகரிக்கும் நாள், மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதாக செய்து முடிப்பீர்கள்.

**மகரம்**

எதிர்கால முன்னேற்றத்திற்கு அக்கறை காட்டுவீர்கள், போட்டியாக செயற்பட்ட சிலர் மனம் மாறுவர், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்

**சிம்மம்**

கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், சந்தோசம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், உங்களின் செயற்பாடுகளால் பாராட்டுக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**தனுசு**

கடன் சுமை குறைந்து கவலைகள் குறையும் நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்**

உடன் பிறப்புக்கள் உதவிக் கரம் நீட்டுவர், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும், குடும்ப சுகமுண்டு.

**துலாம்**

ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள், சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, அமைதிக் குறைவான நாள்.

**கன்னி**

தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மாற்று கருத்துடையோர் மனம் மாறுவர், பயணங்களால் பலனுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள மொழிப் பயிலரங்கு கோப்பாயில் இரண்டு நாட்கள்


யாழ். கல்வியங்காடு டச்சுவீதியில் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தினால் நடத்தப்படும் மும்மொழிக் கற்கை நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள சிங்கள மற்றும் ஆங்கிலக் கற்கை பயிலரங்குகள் இன்றும் நாளையும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இடம்பெறவுள்ளன.

மும்மொழிக் கற்கை நிலைய இயக்குநர் லிலானி அமரசிங்க தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தொடக்கி வைக்கவுள்ளார்.




சிங்களக் கற்கை பயிலரங்கின் வளவாளர்களாக தேசிய கல்வி நிறுவகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் விராஜித் கமகே, பிலிமத்தலாவ ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர் டபிள்யூ .கருணாதிலக்க, பதுளை மாவட்ட சிங்கள பாட ஆசிரியர் விஜயகாந்த் ஆகியோர் பங்கு கொள்ளவுள்ளனர். ஆங்கில கற்கையின் வளவாளர்களாக யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர்களான ம.பிரபாகரன், ச.முகுந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்பயிலரங்கு எதிர்வரும் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை மற்றும் அரச கரும மொழிகள் திணைக்களப் பரீட்சை ஆகியவற்றிற்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும் நோக்கில் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)



நன்றி:-மிரர்

# புதிய பாடநெறிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்திய துணைத்தூதரகமானது இல.14, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள தூதரக வளாகத்தில் அமைந்துள்ள இந்திய கலைக்கூடத்தில் கலைப்பாடநெறிகளை கற்க ஆர்வமுள்ள மாணவர்களுக்காக பின்வரும் பாடநெறிகளுக்கான புதிய பிரிவுகளை எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கவுள்ளது.

கர்நாடக சங்கீதம் (வாய்ப்பாட்டு),யோகா ,ஹிந்தி, இசைக்கருவிகள், வயலின் மேற்படி பாடநெறிகளில் இணைந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் கீழே கேட்கப்பட்டுள்ள விபரங்களை cgi.jaffna@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது 021-2220503 எனும் நகல் இலக்கத்திற்கு இம் மாதம்22 ஆம் திகதி 2014 ஆம் ஆண்டுக்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

பெயர் மற்றும் வயது, இணையவுள்ள பாடநெறி (ஒன்றுக்கு மேற்பட்ட பாட நெறிகளை தெரிவு செய்ய முடியும்) தங்களுக்கான இசைக் கருவிகளை எடுத்து வர முடியுமா?, மேலதிக தொடர்புகளுக்கான உங்கள் மின்னஞ்சல் முகவரி அல்லது கையடக்க தொலைபேசி இலக்கம், பயிற்சிகள் வார நாட்களில் மட்டும் நடைபெறும். பாடநெறிக்கான பதிவுக்கட்டணம் (இலங்கை) 250ரூபா. பயிற்சிக்கட்டணம் இலவசம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# நினைவு தினம்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகரும் மாபெரும் சட்டமேதையுமான ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் (இராணிவழக்கறிஞர்) 113 ஆவது பிறந்த தின நிகழ்வு இன்று சனிக்கிழமை நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்நிகழ்வு முற்பகல் 10 மணிக்கு குருநகரில் உள்ள ஜீ.ஜீயின் திருவுருவச் சிலையருகில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.மேற்படி நிகழ்வில் கட்சியின் அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர் என அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஈ.ஏ.ஆனந்தராஜா அறிவித்துள்ளார். (இ

# 'அக்காவுக்கு எழுதிய கடிதம்' கவிதை நூல் அறிமுக அரங்கு

பொலிகை கலை இலக்கிய மன்றத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவும் கவிஞர் ஆ.முல்லைத்திவ்யனின் **அக்காவுக்கு எழுதிய கடிதம்** கவிதை நூல் அறிமுக அரங்கும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பொலிகண்டிச் சந்தி பொது நோக்கு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பொலிகண்டி பொலிகை கலை இலக்கியமன்றத்தின்தலைவர்வீ.துசாந் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கந்தவன ஆலய தர்மகர்த்தா செவாலியர் திருமதி சிவயோகநாயகி இராமநாதன் மற்றும் சாகித்திய ரத்னா இலக்கிய எழுத்தாளர் தெணியான் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக சிறுகதை எழுத்தாளர் கொற்றை பி.கிருஸ்ணானந்தன், சூரியன் வானொலி அறிவிப்பாளர் இராமசாமி ரமேஸ், எழுத்தாளர் மற்றும் விமர்சகரான குப்பிளான் ஐ.சண்முகன்மற்றும்கவிஞர் யோ.புரட்சி ஆகியோர் கலந்து கொள்வதுடன் இன்னும் சில இலக்கிய கர்த்தாக்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன் போது வாழ்த்துரையினை ஓய்வு நிலை கிராம சேவையாளர் சி.சிவபாலசிங்கம் வழங்கவுள்ளதோடு ஆசியுரைகளை பொலிகண்டி கந்தவன தேவஸ்தான குருக்கள் சிவப்பிரம்மஸ்ரீ ச. வைத்திய நாதக் குருக்கள் மற்றும் சக்கோட்டை புனிதசவேரியார் ஆலய பங்குத் தந்தை அருட்திரு தா. நிரூபன் நிஷானந் ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-7-29)

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கப்படும் நிதி திரும்புவதில்லை

## துணைவேந்தர் தெரிவிப்பு

* 242 மில்.செலவில் உடற்பயிற்சி கூடம்
* இராமநாதன் நுண்கலைப்பீடம், ஆயுர்வேதம், வணிகமும் கணக்கீடும் } நிறுவனமாக இயங்கும்
* மாணவர் விடுதிகள் புதிதாக அமைப்பு
* ஒவ்வொரு அலகிற்கும் 279 மில்.ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அபிவிருத்திப் பணிகள் சிறப்பான முறையில் இடம்பெற்று வருவதாகவும் பல்கலைக் கட்டடங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி திரும்பிச் செல்வதில்லை எனவும் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள்ளார்.**

2016 ஆம் ஆண்டு பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டு போட்டி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது எனவும் இதற்காக 242 மில்லியன் ரூபா செலவில் உடற்பயிற்சிக் கூடம் (Gym) ஒன்றும் கட்டப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் நடைபெற்ற ஊடகவியளாலர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு 20 வருடங்களுக்குத் தேவையான கட்டடங்கள் ,வளங்கள்என்பனவும்எத்தனை மாணவர்களைஉள்வாங்குவதுபோன்ற விடயங்கள் அனைத்தும் தற் போதே திட்டமிடப்பட்டுள்ளன.

யாழ். பல்கலைக்கழகத்தின் ஒரு பிரிவாக இயங்கி வருகின்ற இராமநாதன் நுண்கலைக்கப்பீடம், ஆயுர்வேதம் ,வணிகமும் கணக்கீடு என்பன நிறுவனமாக இயங்குவதற்கு பல்கலைக்கழகமானியங்கள்ஆணைக்குழு அனுமதித்துள்ளது.

மாணவர்களின் தங்குமிட வசதிக்கென பல விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன. கோண்டாவிலில் 22 பரப்புக்காணியில் 2 விடுதிக ளும் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்திற்கு பின்புறம் இரு விடுதிகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

யாழ். பல்கலைக்கழக அபிவிருத்திக்கென ஒவ்வொரு அலகுகளாக மொத்தம் 279 மில்லியன் ரூபாய் நிதி உலக வங்கியினால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.


யாழ்.பல்கலைக்கழகத்திற்கென் ஒதுக்கப்படுகின்ற நிதி திரும்பிச் செல்வதில்லை.மேலும் நிதி கேட்டுக் கொண்டுள்ளோம் என்றார்.

மேலும் எதிர்வரும் 10 ,11 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள 30 ஆவதுபட்டமளிப்புவிழாவில் ஆயிரத்து 372 பேர் பட்டம் பெறவுள்ளனர்.

இதில் முதலாம் நாளில் முதலாம் அமர்வில் 164 பேரும் இரண்டாம் அமர்வில் 180 பேரும் மூன்றாம் அமர்வில் 172 பேரும் நான்காம்அமர்வில்164பேருமாகமொத்தம் 680 பேர் பட்டம் பெறவுள் ளனர்.

இரண்டாம் நாளான 11 ஆம் திகதி 5 ஆம் அமர்வில் 176 பேரும் ஆறாம் அமர்வில் 181 பேரும் ஏழாம் அமர்வில் 178 பேரும் எட்டாம் அமர்வில் 157 பேருமாக மொத்தம் 692 பேர் இரண்டாம் நாளில் பட்டம் பெறவுள்ளனர்.

ஒவ்வொரு மாணவரும் தமது ஒவ்வொரு உறவினருடன் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)





யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் எழுதிய வட இலங்கையில் சுற்றுலாவும் மரபுரிமைச் சின்னங்களும் எனும் நூல் வெளியீட்டு விழா யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசியர் வசந்தி அரசட்ணம் நூலினை வெளியிட்டு வைக்க பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் தே.அருள்வேல் பெற்றுக் கொள்வதையும் அருகில் நூல் ஆசிரியர் பேராசியர் ப.புஸ்பரட்ணம் நிற்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மு.கா.தனி கரையோர மாவட்டத்தை கோருவது

# இனவாதத்தின் பிரவேசமாகும்

**தமக்கு எதிரான முஸ்லிம்களின் விரோதத்தை குறைப்பதற்காகவே மு.கா.தனி கரையோர மாவட்டத்தை கோருகிறது. இத்தகைய கோரிக்கையானது இனவாதத்தின் பிரவேசமாகும். எனவே நாட்டை பிளவுபடுத்தும் எந்தவொரு கோரிக்கையையும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

நாட்டில் ஒற்றுமையான பரிபாலனமே தேவை. இருப்பினும் பிரச்சினைகளின் போது முஸ்லிம்களுக்காக குரல் கொடுக்காத மு.கா. மீளவும் இனங்களிடையே பிரிவினையை ஏற்படுத்த முயற்சிப்பதாகவும் அவர் குற்றம் சுமத்தினார்.

ஜே.வி.பி. தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் முன்வைக்கப்பட்ட கரையோர மாவட்ட பரிபாலன கோரிக்கை ஏற்றுக் கொள்ளக் கூடிய கோரிக்கையல்ல. இந்த கோரிக்கை முஸ்லிம்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையல்ல. இனவாத அரசியலை மேற்கொள்ளும் முஸ்லிம் காங்கிரஸின் கோரிக்கையாகும்.

நாட்டில் முஸ்லிம்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வந்த தருணத்தில அமைதி அரசியலை மேற்கொண்டு வந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தற்போது விடுத்துள்ள கோரிக்கை நகைப்புக்குரியது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை இந்நாட்டு முஸ்லிம்கள் நிராகரித்து விட்டனர். இந்த விரோதத்தை மறுக்கடிக்கவே முஸ்லிம் காங்கிரஸ்இவ்வாறு கோரிக்கை விடுக்கிறது.

நாட்டில் ஐக்கியம் மிளிர்ந்து வரும் இத்தருணத்தில் இக் கோரிக்கை விடுத்திருப்பது நாட்டில் இனங்களுக்கிடையில் பிரிவினைவாதம மீளவும் தோற்றுவிக்க காரணமாக இருக்கும். இத்தகைய பிரதிபலனை எதிர்பார்த்ததாகவே மு.காவின் கோரிக்கை அமைந்துள்ளது.

எனவே, நாட்டை பிளவுபடுத்தும் எந்தவொரு கோரிக்கையையும் ஜே.வி.பி ஏற்காது. அனைத்து இனங்களும் ஒன்றிணைந்து தீர்மானங்களை எடுக்கும்நாட்டையே நாங்கள் எதிர்பார்க்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)


### வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்

காலை 9.00 - பி.ப 1.00

கைகொடுக்கும் நண்பர்கள்
104,4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
021 222 8117
(8221)

### நிரந்தர வேலைவாய்ப்பு

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனத்தில் பல வேலைவாய்ப்புக்கான வெற்றிடங்கள் கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம்/டொபி/பிஸ்கட்/ஆடை போன்றவற்றின் உற்பத்தி, லேபல், பொதியிடல் பிரிவுகளுக்கும் (மேசன், கை உதவியாளர், தச்சு வேலைகள், யாழ்,கிளிநொச்சி மாவட்டங்களில்) 18-50 வயது ஆண், பெண் உடனடியாக தேவை சம்பளம் 18000/=, 38000/= உணவு, தங்குமிடம் குறைந்த விலைகள் வருகை அன்றே வேலை.

தொடர்புகளுக்கு-0771116770/ 0776838231 (சி-8969)

### கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 68செவ் 1 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: B/3790 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 49 சூரி செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BCA/ வங்கி உதவி முகாமையாளர்<br>தொ.இ: G/1309 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 25 3/4 செவ் 2 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BA/ முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: B/3792 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3 ஆம்<br>கி.பா: 58 1/2 செவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: G/3041 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 68 1/4 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர் (லண்டன்)<br>தொ.இ: B/3794 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2ஆம்<br>கி.பா: 68 3/4 செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BSC, MSC/ தனியார் தொழில்<br>தொ.இ: G/3043 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 40 சூரி செவ்<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்:HNDA, B.COM<br>தொ.இ: B/3795 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 2ஆம்<br>கி.பா: 19 1/2<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA,MA/ அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ: G/3048 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## 56 வது அகவை நிறைவில் அகமகிழ்ந்து வாழ்த்து

### ஸ்ரீமான் சிவபாதம் நந்தகுமார்

(வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் அவர்கள்)



கல்வியே கருந்தனம் என்று
என்றும் ஓம்பும்
கல்வியே திட்பநுட்பமாய்
திட்டமிடல் கொண்டியம்பும்
மும்மொழியும் முதிர்மொழியாய்
செப்பிடும் திறனுடன்
செம்மையாய்க் காத்திடும்
எம் பிரபாகரமாய் ஒளிர்ந்திடுவாயே!

சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜாக்குருக்கள்
B.A.Dip.in.Ed,M.A
பிரதியதிபர் யா/அம்பன் அ.மி.த.க பாடசாலை
பிரதமகுரு, ஆதீனஹர்த்தா, தும்பளை
நெல்லண்டைப் பத்திரகாளியம்மன்
இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளியம்மன்
வடபத்திரகாளியம்மன் தேவஸ்தானம்.

(சி-8985)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீரியாபெத்த மண்சரிவு; 19 பேரிடம் வாக்குமூலம்

(கொழும்பு)

**கொஸ்லாந்த மீரியாபெத்த பிரதேசத்தில் இடம்பெற்ற மண்சரிவு தொடர்பில் பிரதேச செயலாளர், கிராம சேவகர் உட்பட 19 பேரிடம் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டு இச்சம்பவம் தொடர்பான அறிக்கையொன்று பொலிஸாரால் தயாரிக்கப்பட்டு வருகின்றது எனவும் வெளிநாடு சென்றுள்ள பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்ககோன் நாடு திரும்பியதும் அவரிடம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அவருடாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.**



இதுவரையில் 10 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் 28 பேரை காணவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

சடலங்களை அடையாளம் காணும் போது அனுமான அடிப்படையில் எவ்விதமான தீர்மானமும் எடுக்கப்படாது. உரிய முறையில் அடையாளம் காட்டினால் மட்டுமே சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்படும். இன்றேல் அந்த சடலத்தின் பாகங்கள் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்படும். அவை நவீன முறையிலான மரபணு(டி.என்.ஏ) பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நட்டஈடு மற்றும் மரண சான்றிதழ் வழங்குவதில் ஏற்படும் சிக்கல்களை தவிர்க்கும் வகையிலேயே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

பதுளை, கொஸ்லாந்த, மீரியாபெத்த பிரதேசத்தில் இயற்கை அனர்த்த அபாயம் இருப்பது தொடர்பில் அங்கிருந்த மக்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்ததா? என்பது குறித்து விசாரணை நடத்தி, தன்னிடம் அறிக்கை சமர்ப்பிக்குமாறு, பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்ககோனுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த 30 ஆம் திகதி வியாழக்கிழமை மீரியபெத்தயிலிருந்து உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவுக்கிணங்க, பொலிஸமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு அறிக்கை தயாரக்கப்பட்டதாக அஜித் ரோஹன மேலும் குறிப்பிட்டார். (இ-5)

# அஹங்கம கடலில் மூழ்கி சுவீடன் பிரஜை உயிரிழப்பு

(கொழும்பு)

காலி, அஹங்கம பகுதியில் கடலில் குளிக்கச் சென்ற சுவீடன் பிரஜையொருவர் நீரிழ் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதுடன், 22 வயதான வெளிநாட்டு பிரஜை ஒருவரே கடலில் மூழ்கியுள்ளார். உயிரிழந்த சுவீடன் பிரஜையின் சடலம் கராப்பிட்டி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடலில் மீட்கப்பட்ட நபரின் சடலம் தொடர்பான பிரேத பரிசோதனை நேற்று நடத்தப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 120 |
| தக்காளி | 120 | 110 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 120 | 80 | 120 |
| கரட் | 140 | 130 | 160 |
| பூசணி | 40 | 40 | 60 |
| புடோல் | 70 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 80 | 90 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 |
| பாகற்காய் | 200 | 150 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 70 | 90 | 60 |
| பயற்றங்காய் | 140 | 180 | 140 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 70 | 100 | 100 |
| கறிமிளகாய் | 160 | 180 | 160 |
| முருங்கைக்காய் | 80 | 100 | 120 |
| போஞ்சி | 160 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | 40 | 40 | 80 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 120 | 120 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35-40 |
| இராசவள்ளி | 200 | — | — |

# அதிபர்களின் கவனத்திற்கு

யாழ்.வலிகாமம் கல்வி வலயத்தை சார்ந்த பாடசாலைகளில் கடமையாற்றி 2008.07.01 ஆம் திகதிக்கு பின்னர் ஓய்வுபெற்ற இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த அதிபர்கள், கல்வி அமைச்சு செயலாளரின் ED/04/60/01/15V இலக்க 2014.10.27 ஆம் திகதிய கடிதத்தின் பிரகா்ரம் அதிபர் சேவை உள்ளீர்ப்பு படிவம் பூரணப்படுத்தி நாளை மறு தினம் 10 ஆம் திகதிக்கு முன்னர் மீள ஒப்படைக்க வேண்டியிருப்பதால் ஆசிரிய நிர்வாக கிளையில் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களைப் பெற்று பூரணப்படுத்தி மீள ஒப்படைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா அறிவித்துள்ளார். (இ

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 186


விநாயகமூர்த்தி விஜியந்தன்




சக்தி வேல்




சித்திரா சாரி




பிருந்தன்




மரண மாஸ்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராளிக்குழுவுடன் இணைய முயன்ற மாலைதீவு பிரஜைகள் மூன்று பேர் கைது

**சிரியாவின் போராளிக்குழுக்களுடன் இணைந்து கொள்ளும் நோக்கில் சென்ற மூன்று மாலைதீவு பிரஜைகள் இலங்கையில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு மாலைதீவுக்கே நாடு கடத்தப்பட்டுள்ளதாக மாலைதீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

23 மற்றும் 23 வயதான இரண்டு ஆண்களும் 18 வயதான பெண்ணுமே இவ்வாறு நாடு கடத்தப்பட்டதாக மாலைதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மூவரும் துருக்கியின் ஊடாக சிரியாவுக்குள் பிரவேசிக்க திட்டமிட்டதோடு மருத்துவ விடயம் தொடர்பில் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

எனினும் அவர்கள் இலங்கைக்குள் பிரவேசிக்கும் போது ஒருவழி விமான அனுமதிச்சீட்டுக்களையே கொண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூவரில் 23 வயதான ஆணும் 18 வயதான பெண்ணும் சட்டபூர்வமற்ற முறையில் திருமணம் செய்து கொண்டவர்கள் எனவும் குறித்த பெண் தற்போது 7 மாதக் கர்ப்பிணியாக உள்ளார் என்றும் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. (இ-5)

## தனி மாவட்டம் கோருவது நாட்டுப் பிரிவினைக்கல்ல

### ஹசன் அலி விளக்கம்

**பள்ளி வாசல்களை பயங்கரவாதிகளை உருவாக்கும் நிலையமாக பார்க்கும் போக்குள்ளது.**


முஸ்லிம்களுக்காக ஒரு தனி நிர்வாக மாவட்டத்தை ஏற் படுத்துமாறு கோருவதை ஒரு தனிநாட்டுக் கோரிக்கையாகக் கொள்ளக் கூடாது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் கல்முனையை மையமாகக்கொண்டு கரையோரமாக வாழும் முஸ்லிம்களுக்கான தனியான மாவட்டம் ஒன்றை ஏற்படுத்தும் முஸ்லிம் காங்கிரஸின் கோரிக்கையை பிரதமர் தி.மு. ஜயரட்ன நிராகரித்தது குறித்து கருத்துக் கூறும் போதே ஹசன் அலி இதனை தெரிவித்தார்.

அம்பாறை முஸ்லிம்கள் தமது காரியங்களை தமது சொந்த மொழியிலேயே செய்து கொள்வதற்கு வசதியாக முஸ்லிம் காங்கிரஸினால் முன்வைக்கப்பட்ட இந்தக் கோரிக்கை ஒரு புதிய கோரிக்கை அல்ல என்று கூறும் ஹசன் அலி கிழக்கு மாகாண ஆட்சியமைப்பதற்கான நிபந்தனையாகக் கூட இதனை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஏற்றிருந்ததாகவும் அனைத்து முஸ்லிம்களையும் தலிபான்களாகவும், அல்கொய்தாவாகவும் பள்ளிவாசல்களை பயங்கரவாதிகளை உருவாக்கும் நிலையங்களாகவும் பார்க்கும் ஒரு போக்கு பெரும்பான்மைக் கட்சிகளின் மத்தியில் வலுத்துள்ளதாகக் கூறும் ஹசன் அலி இந்த விடயத்தில் முஸ்லம் மக்கள் கொதித்துப் போய் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## கிரி விகாரைக்கு மின்சாரம் வழங்கிய மகிந்த





கதிர்காமத்திலுள்ள வரலாற்று பிரசித்தி பெற்ற கிரி விகாரைக்கு நிரந்தர மின்சாரம் வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம் பெற்றது. இதில் ஜனாதிபதி கலந்து கொண்டு நிகழ்வினை கோலாகலமாக ஆரம்பித்து வைத்துள்ளார்.

கதிர்காமத்துக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி முதலில் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் மின்சாரத்தினை ஆரம்பித்து வைத்துள்ளார்.

விகாரையின்பிரதம வணக்கத்திற்குரிய தேரர் உடுகம ஸ்ரீ புத்தராகித்த வழிபாட்டின் போது ஜனாதிபதிக்கு வாழ்த்துக்களையும் ஆசீர்வாதங்களையும் வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வில் பிரதியமைச்சர் சனத் ஜயசூரிய, காமினி சரத் ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ)

## சூழலுக்கியைவான பசுமைத்தொழில்நுட்பங்கள்-25

# மரநடுகை மாதமும் நடுகை தொழில்நுட்பமும்




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

பசுமையின் குரலை ஓங்கியொலிக்க பலவழிகளில் செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டிய தேவை உணரப்பட்டுள்ளது. இது காலத்தின் கட்டாயமுங்கூட. மரமொன்றை நொடிப்பொழுதில் மின்னியக்க வெட்டுக்கருவி மூலம் வெட்டிச் சாய்த்துவிடலாம். ஆனால் அந்த மரம வளர்ந்துவர எவ்வளவு ஆண்டுகள் தேவையென்பதை நாமெல்லோரும் உணரத்தலைப்படவில்லை. மரமொன்றை வெட்டும் போது எமக்குள்ள அவசரமும் ஆதங்கமும் அதனை நடுவதற்கு இருக்கவில்லை. அன்று நட்ட விதை இன்று விருட்சமாகி எமக்கு பல பயன்களை தரும்போதும் அதனை நாம் எதிர்கால சந்ததிக்கு வளமுள்ளதாக கொடுக்க வேண்டும் என சிந்திக்க தவறிவிட்டோம். இதனை மையமாக வைதது மாகாணசபையினால் நவம்பர் மாதத்தை மரநடுகை மாதமாக தெரிவு செய்யப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதென்பது இலகுவான காரியமல்ல. ஆதலால்இதில் நடுகை மாதததில் ஆரம்பித்து தொடர்ச்சியாக இந்த நடுகை மாதத்தை இவ்வருடத்திற்கு முழுமையாக முன்னெடுக்க முடியும். பல் பயன்தரு(ம்) மரங்களை தெரிவு செய்து நடுகையை மேற்கொள்வது சிறந்ததாயினும் எமது சூழல் மற்றும் காலநிலையை கருத்தில் கொண்டு காலபோகத்தில் கிடைக்கும் அதீத மழைகாலங்களில் மரக்கன்றுகளை நடுகை செய்வது பொருத்தப்பாடானதாகும்.

நடுகை செய்யப்பட்ட பின்னர் மரக்கன்றுகளின் வளர்ச்சியை அவதானிப்பதும் பராமரிப்பதும் முக்கியமானதுமாகும்.

குறிப்பாக வீதியோர மரநடுகையில் தெரிந்தெடுத்த மரங்களை நடுகைசெய்யலாம். இதனை மாகாண சபையினூடாக நடைமுறைப்படுத்தலாம் அல்லது அந்தந்த பிரதேச சபைகளினூடாக நடைமுறைப்படுத்த



இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-XVI

லாம். இங்கே யார் இதனை செயன்முறைப்படுத்துவது என்பதற்கு மேலாக மக்களின் உதவியுடன் இவ்வகையான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவது சிறந்தது. எந்த அபிவிருத்தி திட்டங்களாயினும் அவ்வூர் மக்களின் பங்குபற்றல் அவசியமாகும். வீதியோர மரநடுகை புதிதாக அமைக்கப்பட்ட வீதிகளின் இருமருங்கிலும் செய்யலாம். ஆனால் இம் மரங்கன்றுகளை நடுகை செய்த பின்னர் அவற்றை பராமரிக்கும் பொறுப்பு அவ்விடத்தில் அல்லது நடுகை செய்யப்பட்ட இடத்திற்கு அண்மித்த மக்களிடம் பொறுப்பாக கொடுத்தல் அவற்றை இலகுவாக பராமரிப்பதறகு ஏதுவாகவிருக்கும். அத்துடன் இந்த மரங்களிலிருந்து கிடைக்கும் பயன்களை அதனைப் பராமரிக்கும் மக்களே பெறுவற்கு வழிசெய்யலாம். வீதியோரங்களில் தெரிவு செய்யப்பட்ட மரங்களை நடுகை செய்வதன் மூலம் எமது பகுதியில் வீதி அகலமாக்கியபோது வெட்டபபட்ட மரங்களுக்கு இணையாக புதிய மரங்களை நடுவதாகவும் இருக்கும். நடுகை செய்யும் மரங்களில் சிறிய இலை கொண்ட தாவரங்கள் சிறப்புக்குரியவை.

வீதியோரத்தில் மரங் களை நடுகைசெய்யும் போது அவற்றை மரம் விரும்பிய மாதிரி வளர விடாது நாம் விரும்பியபடி மரத்தின் [illegible] வாகனங்களோ மற்றும் பயணிகளோ பயணிப்பதற்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாதவாறு சீர்செய்து கத்தரித்து வளர்க்கலாம். இதற்காக மாகாண சபையிடமோ அல்லது வீதி அபிவிருத்தி சபையிடமோ மேலே வலுவின் மூலம் உயர்ந்து சென்று கத்தரிப்பதற்கான உயர்த்தி வசதியிருபபது நல்லது. நகரை, கிராமத்தை, வீதியை அழகாகவும் பிரயோசனமாகவும்வைத்திருப்பதற்காக தொழில்நுட்பத்தின் அவசியம் இங்கே பரிந்துரைக்கப்படுகின்றது. குறிப்பாக மழைகாலங்களில் உயர்ந்து வளர்ந்திருக்கும் மரங்கள் சரிந்து விழுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம். இவ்வேளையில் மரத்தின் இலைப் பகுதியை, விசாலமான பகுதியை கத்தரிப்பதன் மூலம் தலைப்பாரத்தை குறைத்து மரம் சரிந்து விழுவதை தடுத்திட முடியும். பலருக்கு தலைப் பாரம் அதிகமாக இருப்பதனால் தான் அவ்வப்போது தலை முடியை வெட்டி சீர்செய்து கொள்கின்றனர். ஆனால் சிலர் அதுவே அழகு என நீட்டி வளர்ப்பதுவுமுண்டு. தலைப் பாரம் கூடக்கூட பிரச்சினையும் அதிகமாகின்றது. மாறாக இது பெண்களுக்கு பொருந்தாது. ஏனெனில் இங்கே பெண்களில் நீண்ட தலைமுடியென்பது அழகு அம்சங்களில் ஒன்றாயிருக்கின்றது. பரட்டையாக விடாது சீவி முடித்து சிங்காரிதல் என்பது மரத்திற்கு செய்யும் கத்தரிப்புக்கு ஒப்பாக்க முடிவதோடு மனிதனுக்கும் சரி பொருத்தப்பாடாயிருக்கின்றது அல்லவா.


வீதியோரம் சிறிய இலைகளையுடைய தாவரங்களையும் மழை, காற்று போன்றவற்றிற்கு தாக்குப்பிடிக்கக் கூடிய மரங்களையும் நடுகைசெய்யலாம். குறிப்பாக வேரின மூலம் பரவிவிடாத மரங்களை தெரிவு செய்வது நல்லது. இல்லையெனில் பாதைக்கு இத்தாவர வேர் கள்னால் பாதிப்பு ஏற்பட்டு விடும். விளாத்தி, மா, புளி, கருவேலமரம், இலவு, வாகை இன்னும் ஏனைய நிழல் தரும் மரங்களையும் நடுகை செய்யலாம். மூலிகைத்தாவரங் களை வளர்ப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கலாம். எமது பிரதேசத்திற் கென அடையாளப்படுத்தக்கூடிய மூலிகைத்தாவரங்கள் உண்டு. அவற்றை தெரிவுசெய்து வளர்ப்பது இத்தாவரங்களை அழிவிலிருந்து காப்பதற்கும் உதவும்.

மரங்களை நடுகை செய்ய காட்டும் முனைப்பு அந்த மரங்களை பாதுகாப்பதிலும் இருக்க வேண்டும். இது பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே எழுப்பப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நிறைந்த மனசு!



சங்கரன் கோயிலில இருந்து கோவில்பட்டி செல்லும் பேருந்தில் அப்பா, அம்மாவுடன் ஜன்னல் ஓரத்தில் உட்கார்ந்திருந்தான் சீனிவாசன்.

"கரம், சிரம், புறம் நீட்டாதீர்.'

"ஓடும் பஸ்ஸில் ஏற வேண்டாம். பேருந்து நின்ற பின் இறங்கவும்.'

"சரியான சில்லறை கொடுத்து டிக்கெட் பெறவும்.'

பேருந்தினுள் அச்சு எழுத்தில் ஆங்காங்கே எழுதப்பட்டிருந்த வாசகங்களைப் படித்தான் சீனிவாசன.

அவனுக்கு முன் இருக்கையில் அமர்ந்திருந்த ஒருவர், தன் கையை ஜன்னல் கம்பி மீது வைத்திருந்தார்.

அதனால், பாதிக் கை பேருந்துக்கு வெளியே நீட்டிக்கொண்டிருந்தது.

பார்த்தீங்களா அம்மா, கை வெளியே நீட்டாதேனு எழுதியிருந்தாலும் எப்படி வெச்சிருக்காங்க.

நம்ம நன்மைக்காகத்தானே எழுதிப் போட்டிருக்காங்க.

அதன்படி நடந்தால், நமக்குத் தானே நல்லது என்று அம்மாவிடம் கிசுகிசு குரலில் சொன்னான் சீனிவாசன்.

அம்மா எதுவும் சொல்லவில்லை.

பேருந்து ஓட்டுநர் தனது இருக்கைக்கு வந்ததும், வெளியே நின்றிருந்த சிலர் பாய்ந்து ஏறினார்கள்.

வண்டி கிளம்பிய பிறகு சில இளைஞர்கள் ஓடிவந்து ஏறிக்கொண்டு, படிகளிலேயே நின்றார்கள்.

ஓட்டுநர் சீட்டுக்குப் பின்னால், கம்பி வலையில் ஒரு சின்ன மரப்பெட்டி இருந்தது.

அம்மா, அதுதான் ஃபஸ்ட் எய்டு பாக்ஸ். முதலுதவிப் பெட்டி.

பஸ்ஸில யாருக்காவது அடிபட்டுடுச்சுனா... அதில், காயத்துக்கு மருந்து இருக்கும் என்றான் சீனிவாசன்.

விடுமுறை நாள் என்பதால், பேருந்து நிரம்பி வழிந்தது.

நிறையப் பேர் நின்றுகொண்டு பயணம் செய்தார்கள்.

படியிலே நிற்காதீங்க தம்பிகளா... உள்ளே வாங்க என்றவாறு நடத்துநர, டிக்கெட் கொடுக்க ஆரம்பித்தார்.

நம் நாட்டில் ரூல்ஸ் நிறையவே இருக்கு.

அது நடைமுறையில் செயற்படுவதுதான் ரொம்பக் குறைவு என்றார் அப்பா.

பேருந்து, கழுகுமலையை நெருங்கிக் கொண்டிருந்தது.

ஓட்டுநர் இருக்கைக்கு அருகே பேனட் மீது ஒரு நடுத்தர வயது அம்மா உட்கார்ந்திருந்தார். திடீரென, ஐயோ... கால்! என்று அலறினார்.

ஓட்டுநர் சடன் பிரேக் போட்டதால், நிலை தடுமாறிய அந்த அம்மாவின் வலது கணுக்காலில் இரும்புக் கொக்கி இடித்து, ரத்தம் வந்தது.

அருகே நின்றிருந்த இளம் பெண, இங்கே உட்காராதேனு சொன்னேனே கேட்டியா என்றார் எரிச்சலுடன.

அந்த அம்மாவின் மகளாக இருக்க வேண்டும்.

முதல்ல இந்த இடத்தை விட்டு எழுந்திரு என்று ஓட்டுநரும் எரிச்சலுடன் சொன்னார.

நிற்க முடியாமல்தானே உட்கார்ந்தேன் என்று முணுமுணுத்தவாறு அந்த அம்மா எழுந்துகொண்டார்.

அந்தப் பெட்டியிலிருந்து, காட்டனை எடுத்துக் கொடுங்க.

ரத்தத்தைத் துடைச்சுகட்டும் என்றார் ஒருவர்.

ஒருவர், சட்டென்று அந்த முதலுதவிப் பெட்டியைத் திறந்தார.

அது, காலியாக இருந்தது.

உள்ளே இருந்த அந்து ப்பூச்சி ஒன்று, இங்கும் அங்குமாக ஓடியது.

முதலுதவிப் பெட்டிக்கே முதலுதவி செய்யணும போல என்றார் ஒருவர், கிண்டலாக.

எந்த கவர்ன்மென்ட் பஸ்ல ஃபஸ்ட் எய்டு பாக்ஸ் ஒழுங்கா இருந்திருக்கு என்றார் ஒருவர்.

கழுகுமலைப் பேருந்து நிலையத்துக்குள் வந்து நின்றது பேருந்து.

சீனிவாசன், வேகமாகக் கீழே இறங்கிச் சென்றான்.

டேய், எங்கேடா போறே? என்று அப்பாவும் அம்மாவும் பதற்றம் அடைந்தார்கள்.

சில நிமிடங்களில் மூச்சிறைக்க வந்து ஏறினான். அவன் கையில் ஒரு கேரிபேக் அந்த அம்மாவை நோக்கிச் சென்றான்.

கேரி பேக்கிலிருந்து டெட்டால் பாட்டிலை எடுத்தான். பிறகு, காட்டன் ரோலில் இருந்து கொஞ்சம் பிய்த்து எடுத்தான்.

டெட்டாலில் பஞ்சை நனைத்து, அவர் கால் காயத்தைத் துடைத்து விட்டான்.

பிறகு, ஒரு ஆயின்மென்ட்டை தடவினான். அந்த அம்மா, சீனிவாசனைப்பார்த்து, ரொம்ப நன்றி தம்பி என்றார்.

நீங்க வேணும்னா என் சீட்டில் வந்து உட்காருங்க என்றான் சீனிவாசன். வேண்டாம் தம்பி.. இன்னும் கொஞ்ச நேரத்துல கோவில்பட்டி வந்திடும் என்றார்.

ஊர்ல போய் டாக்டர்கிட்டே காட்டுங்க என்ற சீனிவாசன், பேருந்தில் இருந்த அந்த முதலுதவிப் பெட்டியைத் திறந்தான்.

எல்லோரும் அவனையே கவனிக்க, தன் கையிலிருந்த காட்டன், பேண்டேஜ் கிளாத், ஆயின்மென்ட் ஆகியவற்றோடு சில ம்மாத திரை கவர்களையும் வைத்தான.

பிறகு அப்பா, அம்மாவோடு வந்து அமைதியாய் உட்கார்ந்து கொண்டான். நாங்க எல்லாரும் முதலுதவிப் பெட்டிகாலியா இருக்குனு குறைதான் சொன்னோம்.

நீ, அந்த அம்மாக்கு உதவி செய்து, பெட்டியையும் நிறைச்சுட்டே என்ற ஒரு பெரியவர் குரலில் நெகிழ்ச்சி. பேருந்து ஓடிக்கொண்டிருந்தது. முதலுதவிப் பெட்டி நிறைந்தது போல, சீனிவாசனின் பெற்றோர் மனமும் பெருமிதத்தில் நிறைந்திருந்தன.



## 11.2014 08 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ❖ 1811 - இலங்கையில் இயற்றப்பட்ட புதிய நீதிமன்ற சட்டப்படி மேல் நீதிமன்றம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ஒன்று கொழும்பில் பிரதம நீதியரசரின் நீதிமன்றமும், Puisne Justice என அழைக்கப்படும் நீதிமன்றம் யாழ்ப்பாணத்திலும் அமைக்கப்பட்டன. கிரிமினல் வழக்குகளுக்கு ஜூரி முறையும் அமுலுக்கு வந்தது.
- ❖ 1889 - மொன்டானா ஐக்கிய அமெரிக்காவின் 41 ஆவது மாநிலமாக இணைந்தது.
- ❖ 1895 - எதிர்மின் கதிர்களைச் சோதனையிடும் போது வில்ஹெம றொண்ட்ஜென் எக்ஸ் கதிர்க ளைக் கணடுபிடித்தார்.
- ❖ 1917 - ரஷ்யாவில் அக்டோபர் புரட்சியை அடுத்து லெனின், ட்ரொட்ஸ்கி, ஸ்டாலின் ஆகியோருக்கு முழு அதிகாரமும் தரப்பட்டது.
- ❖ 1923 - மியூனிக் நகரில் ஹிட்லர் தலைமையில் நாசிகள் ஜேர்மனிய அரசைக் கவிழ்க்கும் முயற்சி தோல்வியில முடிந்தது.
- ❖ 1942 - மேற்கு உக்ரேனின் தெர்னோப்பில் நகரில் நாசி ஜேர்மனியினர் 2,400 யூதர்களை பெல்செக் நகரில் இருந்த வதை முகாமுக்கு அனுப்பினர்.
- ❖ 1950 - கொரியப் போர்: ஐக்கிய அமெரிக்க வான்படையினர் வட கொரிய மிக் விமானங்கள் இரண்டை சுட்டு வீழ்த்தினர்.
- ❖ 1965 - பிரித்தானிய இந்தியப் பெருங்கடல் மண்டலம் அமைக்கப்பட்டது.
- ❖ 1977 - கிமு 1 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க மன்னன் இரண்டாம் பிலிப்பு என்பவனின் சமாதி மனோலிஸ் அண்ட்ரோனிக்ஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

### பிறப்புகள்

- ❖ 1656 - எட்மண்ட் ஹேலி, பிரித்தானிய வானியல் ஆராய்ச்சியாளர (இ. 1742)
- ❖ 1680 - வீரமா முனிவர், இத்தாலியத் தமிழறிஞர் (இ. 1847)
- ❖ 1923 - ஜாக் கில்பி, அமெரிக்க மின்னியல் பொறியாளர், (இ. 2005)
- ❖ 1927 - லால் கிருஷ்ணா அத்வானி, இந்திய அரசியல்வாதி

### இறப்புகள்

- ❖ 1958 - சி. கணேசையர், ஈழத்துத் தமிழறிஞர (பி. 1878)
- ❖ 2000 - சோ. சிவபாதசுந்தரம், ஒலிபரப்பாளர், பி.பி.சி தமிழ் ஒலிபரப்புக்குத் தமிழோசை எனப் பெயரிட்டவர் (பி. 1912)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்

118

..அனைவரும் சச்சின் டெல்லி போட்டியில் நன்றாக விளையாடி இந்தியா- பாகிஸ்தான் ஒருநாள் போட்டிகளை சமன் செய்வார் என்று எதிர்பார்த்தனர். ஆனால், 9 ரன்களுக்கு அவர் ஆட்டம் இழந்ததும் இந்திய ரசிகர்கள் துவண்டுவிட்டனர். சச்சின் அவுட் ஆனதும் பாகிஸ்தான் அணியில் உற்சாகம் கரை புரண்டு ஓடியது. பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் நன்றாக விளையாடி வெற்றிக் கனியைப் பறித்தார். இந்தியா 2-4 என்ற கணக்கில் ஒரு நாள் தொடரில் படுதோல்வி அடைந்தது.

- பிறந்தது:- 24.04.1973
- இடம்:- மும்பை
- உயரம்:- 5.4"
- அப்பா பெயர்:- ரமேஷ் டெண்டுல்கர்
- அம்மா பெயர்:- ரஜினி டெண்டுல்கர்
- சகோதரர்கள்:- நிதின் மற்றும் அஜீத் டெண்டுல்கர்
- மனைவி:- அஞ்சலி
- மகன்:- அர்ஜுன்
- மகள்:- சாரா
- விளையாடும் அணிகள்:- மும்பை அணி, இந்திய அணி, இங்கிலாந்து யார்க்ஷையர் அணி

## இந்தியாவின் பணக்கார விளையாட்டு வீரர்!

இன்றைய திகதியில் இந்தியாவின் பணக்கார விளையாட்டு வீரர் யார் என்று குழந்தையைக் கேட்டால்கூட சச்சின் என்ற பதில் டக்கென்று வரும். காரணம் குழந்தை முதல் பெரியவர் வரை அனைவரையும் ஈர்த்த விளையாட்டு வீரர் ஒருவர் உண்டென்றால் அவர் சச்சின் தான் என்பதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. இன்னும் சொல்லப்போனால் ஒரு திரைப்பட நடிகர் சம்பாதிப்பதைவிட சச்சின் அதிகமான ஊதியம் பெறுகிறார். அவர் ஒரு விளம்பரப்படத்தில் தோன்றினால் அதன் வீச்சு எப்படி இருக்கும் என்பதை விளம்பரதாரர்கள் உணர்ந்தே இருக்கின்றனர். சச்சின் காட்டில் மழை என்றால் அது நூற்றுக்கு நூறு சரி. இவருக்கு முன்னால் தமிழகத்தைச் சேர்ந்த உலகப் புகழ் செஸ் விளையாட்டு வீரர் விஸ்வநாதன் ஆனந்த் விளம்பரங்கள் மூலம் அதிக வருவாய் ஈட்டுபவராக இருந்தார். தற்போது சச்சின் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

ஆரம்ப காலங்களில் சச்சினும் ஏனோ தானோ என்று சில விளம்பரப் படங்களில் நடித்துக் கொண்டிருந்தார். ஆனால், வேர்ல்ட் டெல் விளம்பர நிறுவனத்தின் தலைவர் மார்க் மாஸ்கரன் ஹெஸ்ஸைச் சந்தித்த பிறகு சச்சின் வாழ்க்கையில் மிகப்பெரிய திருப்புமுனை ஏற்பட்டது. பெங்களூரில் உள்ள ஒரு கிளப்பில் சச்சின் மற்றும் மாஸ்கரன் ஹெஸ் ஆகியோரின் முதல் சந்திப்பு நிகழ்ந்தது. இருவரையும் அறிமுகப்படுத்தி வைத்தவர் கிரிக்கெட் வீரர் ரவி சாஸ்திரி. 1995 ஆம் ஆண்டு இந்தச் சந்திப்பு நிகழ்ந்தது. சந்திப்பு நடந்த ஒரு சில மாதங்களிலேயே அக்டோபர் 1995 ஆம் ஆண்டு சச்சினுடன் ஒப்பந்தம் கையெழுத்தானது. சச்சின் சம்பந்தமான விளம்பரங்கள் அனைத்தையும் கையாளும் உரிமையை இந்த ஒப்பந்தத்தின் மூலம் வேர்ல்ட்டெல் நிறுவனத்தின் தலைவர் மாஸ்கரன் ஹெஸன் பெற்றுக்கொண்டார். 1996 ஆம் ஆண்டு தொடங்கி அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு அமலில் இருக்கும் இந்த ஒப்பந்தத்திற்கு சச்சின் வாங்கிய தொகை எவ்வளவு தெரியுமா? 7.5 மில்லியன் டொலர். அன்றைய இந்திய் மதிப்பில் ரூ.31 கோடிகள். மே 2001 ஆம் ஆண்டு மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு இந்த ஒப்பந்தம் நீட்டிக்கப்பட்டது. அதற்கான தொகை 17 மில்லியன் டொலர். சச்சின் வாழ்க்கையில் மிகப்பெரிய திருப்பு முனையை ஏற்படுத்திய மாஸ்கரன் ஹெல் யாருமே எதிர்பார்க்காத விதமாக 26 ஜனவரி 2002 ஆம் ஆண்டு நாக்பூரில் சாலை விபத்து ஒன்றில் பலியானார். இவருடைய மரணம் சச்சினுக்கு பேரிடியாக விழுந்தது. இந்த சோகத்திலிருந்து சச்சின் இன்னும் மீளவில்லை என்றால்கூட அது மிகையில்லை. காரணம் இருவருக்கும் இடையே வர்த்தக ரீதியான உறவுகளைத் தாண்டி நல்ல நட்பு நிலவி வந்தது. பிசினஸ் பார்ட்னர் என்பதை விட எனது மூத்த சகோதரரைப் போன்றவர்.



கே. ரமேஷ் (தொடரும்)

---

# ஆத்ம ஞானத்தைத் தேடி

...இதற்குக் காரணம் வெளியிலிருப்பதாக நாம் நினைத்தாலும் உண்மையில் நமக்குள்ளேதான் ஆழமாகப் பொதிந்து கிடக்கிறது. இதுதான் உண்மை. அனைவருக்கும் எப்பொழுதும் ஏதோ ஒரு கவலை இருப்பதற்குக் காரணம் இதுவே.

அதனால் மீண்டும் கேள்விக்கு வருவோம்...

## கவலைகள் இன்றி வாழ்தல்!

கவலை என்றால் என்ன?

நீங்கள் ஆழ்ந்து உள்ளே நோக்கினால் கவலை என்பது ஏதோ ஒரு சம்பவத்திற்கு உங்களது பதில் செயல்தான் என்பதைத் தெரிந்து கொள்வீர்கள். ஒரு சூழ்நிலை உங்களை கவலைப்பட வைக்கிறதா இல்லையா என்பது, அந்தச் சூழ்நிலைக்கு உங்கள் எதிர்ச்செயல் என்ன என்பதைச் சார்ந்திருக்கிறது. மேலும் கவலை உங்கள் நிரந்தர உள்பேச்சாகி, உங்களை எப்பொழுது நிம்மதியற்றுப் போகச் செய்து விடுகிறது.

உதாரணத்திற்கு உங்கள் நண்பருக்கு ஒரு புதிய வேலை கிடைத்திருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அவர் உங்களிடம் வந்து அவரது புதிய வேலை பற்றியும் அதனால், அவருக்குக் கிடைக்கும் பலன்களையும் சலுகைகளையும் பற்றியும் உங்களிடம் ஆர்வத்துடன் சொல்கிறார். இதற்கு உங்கள் எதிர்ச்செயல் என்னவாக இருக்கும்? விழிப்பின்றி நீங்களே உங்களுக்குள் பேசிக்கொள்வீர்கள்.

ஓ! அவனுக்குப் புதிய வேலை கிடைத்திருக்கிறது. அதனால் அவன் நிறைய பலன்களை அனுபவிக்கிறான். ஆனால் என் நிலை என்ன? இந்த சலுகைகளையும் பலன்களையும் பற்றிக் கேள்விப் பட்டால் என் மனைவி என்ன சொல்வாள்? இவர் என் மனைவியைச் சந்திக்காமல் இருப்பதே நல்லது. இல்லையெனில் நான் தொல்லைக்கு ஆளாக நேரிடும். [illegible] நானும் வேறொரு வேலை தேட வேண்டுமா? ஒருவேளை கிடைக்காவிடில்? எனக்கு மட்டும் எதுவும் சரியாகவே அமைவதில்லை... என்றெல்லாம் எண்ண ஆரம்பித்து விடுவீர்கள்.



இதுதான் கவலை!

கவலை என்பது, உங்களை எப்பொழுதும் வெளியில் ஏதாவது ஒன்றுடன் ஒப்பிட்டுக்கொண்டு உங்களுக்குள்ளேயே அதைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதனால் நிகழ்வது. காலப் போக்கில் இது உங்கள் மன அமைப்பாகவே மாறிவிடுகிறது. நானும் அண்டை வீட்டுக்காரர்களைப் போலவே நன்றாக இருக்கிறேனா? எவ்வாறு என் மேலதிகாரியைக் கவர்வது? என் குழந்தைகள் என்ன நினைப்பார்கள்?

### ஆன்மீகம் 68

எப்பொழுதும் அது குடும்பமோ அல்லது வேலையோ அல்லது சமூகமோ எதுவாக இருப்பினும் நமக்கு அடுத்தவர்களின் அங்கீகாரம் தேவைப்படுகிறது. இதுவே நமது பெரிய கவலை.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/புனித ஜோன் பொஸ்கோவி



A.Tharmitha-191 | K.Tharanka-189 | U.Aswini-188 | A.N.RexHaris-187 | S.Sadhana-187 | T.Pinegash-187

P.Kabilja-184 | S.Mithunya-184 | G.Vaishnevi-184 | R.Vaishnavica-182 | P.Bairavi-182 | S.Shiromy-182

V.Abinanthan-180 | V.Birunthan-179 | P. Harishanan-179 | S. Mathisuthan-179 | V.Mirutanjan-179 | S. Thivanan-179

K.Shammuhi -178 | S.Kijahni -177 | S.Piramikka -177 | S.Priyatharshini -177 | S. Nalin-177 | P. Pangayan-177

P. Shambhavan-176 | S.Sathiyabalini- 175 | S. Saranijan-175 | J. Anne Sheran-175 | A. Anojan-175 | T.Thuvarakan-175

A.Meerasai-174 | K.Orvia-174 | V.Sathurthigha- 174 | A.Vithursha -173 | R.Aarabi -173 | R.Bhaargavi 172

S. Sivaluxsan-170 | Y.Thineshika-170 | R. Derickshan-169 | S.Mary Shiromy -169 | B. Sajaththan-169 | K. Shanjay-169

K.Roshni -167 | M.Vibisan-166 | S.Soba -166 | V.Stephana -166 | A.Thivja -166 | P.Varshika-166

S. Pangayan-162 | S.Sharon-162 | M.Theebica-162 | S.Vishnukanth-162 | S.Hareini - 162 | P.Aathithiyan-161

R.Vimalan-160 | A.Shoumika -160 | W.Jeevasorubi -159 | S.Sabeena -159 | J.Prusothman-159 | V.Tilani -159


## இந்நன்நாளுக்காக இறை

எமது வித்தியாலய சமூகத்திற்கு வெற்றிச் சாதனையை ஈட்டித்தந்
வழங்கும் இந் நாளை தந்த இறைவனுக்கு நன்றி கூறிக்கொண்டு நட
வரலாற்று சாதனையைப் படைத்து அகில இலங்கை ரீதியாக எமது பா
உழைத்த அனைத்து நெஞ்சங்களுக்கும் நன்றி கூறுவதோடு இ
செல்வங்களையும் வாழ்த்தி நிற்கின்றேன்.

பல சோதனைகளையும் வேதனைகளையும் தாண்டி எமது கல்லு
வீறுநடை போட்டமைக்கு இறைவன் தந்த பரிசே இது. எமது வித்திய
உழைப்பேன் என உறுதி பூண்டு கொண்டு இன்றைய விழாவிற்கு
ந்தினர்கள் உட்பட அனைவரையும் வரவேற்று நிற்கிறேன்.

அருட்சகோதரி, மரிய





T.Mihusha -172 | U. Markalbin-172 | B. Shankaran-171 | R.Pirithick

U.Dhiluxana -169 | R.Vamanayana-169 | B. Atchayan-168 | S. Branawa

V. Mathushayan-165 | N. Thabishan-165 | G. Ananian-165 | K.Agshaya

### யா/புனித ஜோன் பொஸ்கோவின்

வரலாற்றுச் சாதனை படைத்த தரம்-5 புலமைப்பரிசி
பெற வைத்த பெருமையுடன் பரீட்சைக்குத் தோற்றிய
வைத்து அகில இலங்கை ரீதியாக இரண்டாம் இடத்
யும் தனதாக்கிக் கொண்டுள்ளது. இன்று இடம்பெறும்
அழைக்கின்றோம்.

நன்

பாடசாலைச்சமூகம், பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ாவின் வருடாந்த பரிசளிப்பு விழா-2014

## ...இறைவனைத் துதிப்போம்


...ளயை ஈட்டித்தந்த எம் மழலைச் செல்வங்களுக்கு பரிசில்களை ...க்கொண்டு நடந்து முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் ...தியாக எமது பாடசாலை முன்னணியில் இருப்பதற்கு என்னோடு ...றுவதோடு இன்று வெற்றி நாயகர்களாக திகழும் மாணவச்


...டி எமது கல்லூரிச் சமூகம் பல அர்ப்பணிப்புக்களின் மத்தியில் ... எமது வித்தியாலயம் மென்மேலும் உயர ஊன்று கோலாக நான் இருந்து ... விழாவிற்கு வருகை தர இருக்கும் பிரதம விருந்தினர்கள்,கௌரவவிரு ...ன்.

...கோதரி, மரிய ஜீவந்தி ,அதிபர்



Congratulations!





T.Sajugee-187, S.Vignarathan-185

J.Abishaliny-185, A. Abishen-184, S.Aksaraan-184



S.Diresha-181, A.Apilaash-181, S.Aarrthy-181, J.Abarna-181, A.Bhanujah -181, N. Abienesh-180

K.Aathankiny-179, V.Abinaya-179, P.AnnNivethiga-178, F.Delucmini-178, S.Kosuki-178, A.Pirathiniseawa-178

S. Rishikaran-177, K.Venuga- 177, K.Pranavi 176, M. Jazan-176, U. Ajay-176, R.Piriyanka -176

N.Inthuja 175, P. Seram-175, R.Duileeshan-174, K. Januran-174, S.Bajithan-174, K.Mathushan-174


K.Shampavi-170, U.Abisan-170, S.Mareen Abishayini -170, M.Theepika -170, G.Thamilini -170, S.Praveena -170

P.Linoshraam-168, N.Thilothaman-168, K.Debora -168, K.Thuvaraka -168, Y.Abirami -167, S.Phobeehaasan -167

V.Kejika-163, S.Nayanika -163, T. Shangaranathan-163, S.Anciha -162, S.Piriyanka -162, M.Miurin -162

R.Sereena -161, D.Jayantha-160, J.Manorajan-160, T.Niruthiga-160, S.Sharujan-160, P.Tharankini -160

S. Banushiyan158, J.Duxshan158, J.Jeshan Marishus-158, S.Apsara -158, P.Pamsika-158, V.Thadshahini -158



R.Piriththicka -171, M.Janani-171, P.Sopitha -171, K.Umaruja -171

S. Branawan-168, T. Lathushan-168, K.Sajeinthan-168, V.Lackshiga -168

K.Agshaya -164, B.Rahuram-164, T.John Thanushan-164, S.Thushanthan-163

## ...ாவின் வருடாந்த பரிசளிப்பு விழா - 2014

...லமைப்பரிசில் பரீட்சையில் 140 பேரை வெட்டுப்புள்ளிக்கு மேல் ... தோற்றிய அனைவரையும் 100 புள்ளிக்கு மேல் சித்தி பெற ...ாம் இடத்தையும் தமிழ் பாடசாலைகளில் முதலாம் இடத்தை ...டம்பெறும் பரிசளிப்பு விழாவிற்கு அனைவரையும் அன்புடன்

நன்றி

...சாலை அபிவிருத்திக்குழு, பெற்றோர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு செலவுத் திட்டம்-2015

...ஆரம்ப பாடசாலை வசதிகள் காணப்படாத பிரதேசங்களிலுள்ள ஒவ்வொரு ஆரம்ப பாடசாலையிலும முனபள்ளிக்கூடங்களை நிறுவுவதற்கு நான் முன்மொழிகின்றேன.

இந் நடவடிக் கைகளுக்காக ரூபா 300 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

### கல்வி

கௌரவ சபாநாயகர் அவர்களே, சிறுவர் நட்பு பாடசாலை முறைமை, மஹிந்தோதய ஆய்வு கூடங்களினை நிறுவுதல், ஆசிரியர் பயிற்சி, பாடசாலைப் புத்தகங்களின் தர மேம்பாடு, கற்பித்தல் சாதனங்கள் மற்றும் உயர்தர வகுப்புகளுக்கான தொழில்நுட்ப பாடங்களை அறிமுகம் செய்தல் என்பவற்றுக்கு நடுத்தரக் காலத்தில் அரசாங்க முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தில் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

1,000 மஹிந்தோதய ஆய்வு கூடங்களுடன் 3 வருடங்களுக்குள் அனைத்து பிரதேச செயலக பிரிவுகளிலும் முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட்ட பாடசாலைகளை உருவாக்குவதற்கு ரூபா 15,000 மில்லியனை ஒதுக்கீடு செய்ய முன்மொழிகின்றேன்.

கிராமியப் பாடசாலைகளில் துப்பரவேற்பாடு மற்றும் ஏனைய வசதிகளை தரமுயர்த்துகின்ற முன்னெடுப்புகளுக்காக ரூபா 1,500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில்களின் வருடாந்த எண்ணிக்கையினை 25,000 ஆக அதிகரிப்பதற்கும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான கொடுப்பனவினை ரூபா 500 இலிருந்து ரூபா 1,500 ஆக அதிகரிப்பதற்கும் முன்மொழிகின்றேன்.

அனைத்து பாடங்களுடன் மஹரகம ஆசிரியர் பயிற்சி கல்லூரியினை அபிவிருத்தி செய்வதற்கும் ஆசிரியர் பயிற்சிக்கான உபகரணங்களை கொண்ட நாடு முழுவதிலுமுள்ள ஏனைய அனைத்து ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும் தரமுயர்த்தப்படுவதற்கும் மேலும் ரூபா 750 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும்.

ஆசிரியர்களின் பயிற்சி துறையினை விரிவாக்குவதற்கு முகாமைத்துவ தொழில் முயற்சி அபிவிருத்தி பீடத்தினையும் அதேபோன்று மீபேயில் அமைந்துள்ள பயிற்சிக் கல்லூரியில் தொழில்நுட்ப பீடத்தினையும் உருவாக்குவதற்கு ரூபா 300 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும்.

ஆசிரியர் சேவைக்கான புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் பதவியுயர்வுகள், சம்பள அதிகரிப்புகள் மற்றும் சேவை தொடர்பான ஏறக்குறைய 240,000 நிர்வாகப் பிரச்சினைகளை வினைத்திறன்மிக்க வகையில் முகாமை செய்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்த சேவைப் பிரமாணக் குறிப்பினை செயற்படுத்துகின்ற போது பதவியுயர்வுகளுக்காக செலுத்த வேண்டிய நிலுவைக் கொடுப்பனவுகளை தீர்ப்பதற்கான நிதி ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிராமியப் பாடசாலைகளுக்கு ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், தகவல் தொழில்நுட்பம், நுண்கலை கற்கைகள் மற்றும் விளையாட்டு போன்ற பாடங்களுக்காக அடுத்த வருடத்திலிருந்து 50,000 ஆசிரிய உதவியாளர்களை ஆட்சேரப்பு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

அவர்கள் கல்விச் சேவைக்கு உள்வாங்கப்படுவதற்கு முன்னரான 5 வருடங்களுக்குள் கல்வித் துறையில் பட்டப்படிப்பினை நிறைவு செய்வதற்கு வேண்டப்படுவதுடன், அதே பாடசாலையில் மேலும் 5 வருடங்களுக்கு சேவையாற்றுதல் வேண்டும். அவர்களுக்கு 9,500 ரூபா மாதாந்த பயிற்சிக் கொடுப்பனவாக வழங்கப்படும்.

### பிரிவெனா கல்வி

2016 ஆண்டளவில் பிரிவெனா கல்விக்கான மாணவர் தொகையினை 25 சதவீதத்தினால் அதிகரிக்கும் வகையில் பிரிவெனா கல்வி விருத்தி செய்யப்படும்.

பிரிவெனா கல்விக்கான வசதிகளை தரமுயர்த்துவதற்கு வகுப்பறைகள், நூலகங்கள், கணனி கூடங்கள், தளபாடம் மற்றும் உபகரணம் என்பவற்றிற்காக ஒவ்வொரு பிரிவெனாக்கும் 500,000 ரூபாவினை தொடர்ந்து வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

பிரிவெனா ஆசிரியர்களுக்கு இடர் கடன்கள், ஆதனக் கடன்கள், அக்ரஹார காப்புறுதி நன்மைகள், புகையிரத ஆணைச்சீட்டுக்கள் போன்ற அனைத்து வசதிகளும் வழங்கப்படுவதுடன் பிக்குகள் மற்றும் ஏனைய மாணவர்களுக்கான கொடுப்பனவினை 25 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### திறன் கல்வி

கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது இளைஞர்களுக்கான துரிதப்படுத்தப்பட்ட திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமானது வருடத்திற்கு 100,000 டிப்ளோமா பட்டதாரிகளையும் சான்றிதழ் பெறுநர்களையும் உருவாக்குவதாகும்.

இந்நோக்கத்திற்காக, டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் தொழில்நுட்பக் கல்லூரிகள், அரசாங்க தொழில்நுட்ப பயிற்சி நிறுவகங்கள் மற்றும் தனியார் பயிற்சி நிறுவகங்கள், வேலைத்தளங்களுடன் இணைந்த நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் பெரும் எண்ணிக்கையிலான மாணவர் அனுமதியினை மேற்கொள்ளும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

தொழில் பயிற்சிக் கல்விக்கு ஊக்கமளிக்கும் வகையில் க.பொ.த. சாதாரண தர மற்றும் உயர் தர பரீட்சைகளில் சித்தியடைந்து மேலதிக கற்கைக்காக பல்கலைக்கழகங்களுக்கு அல்லது ஏனைய உயர் கல்வி நிறுவகங்களுக்கு செல்ல முடியாதிருக்கும் குறை வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த வருடமொன்றிற்கு 50,000 மாணவர்களுக்கு புதிய மாணவர் புலமைப் பரிசில் ஒன்றினை செயற்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

ஒவ்வொரு மாணவருக்கும் மாதாந்த கொடுப்பனவாக 3,000 ரூபா வழங்கப்படும். இப்புலமைப்பரிசில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் நிர்வகிக்கப்படுவதுடன் வேலைவாய்ப்பு காணப்படுகின்ற துறைகளில் Nஏ Qஏ மட்டத்திற்கு மேல் பட்டப்படிப்பு மற்றும் டிப்ளோமா சான்றிதழுக்கான பயிற்சிகளை வழங்குவதற்காக அரசாங்கத்துறை அதேபோன்று தனியார் துறை தொழில பயிற்சி நிறுவகங்கள் இரண்டினாலும் பயன்படுத்தப்படும்.

அப்பாடசாலைகளில் மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான காரணியாக வேலை வாய்ப்பு காணபடும்.

மாணவர் புலமைப்பரிசில்களை வருடமொன்றிற்கு 50,000 ஆக அதிகரிப்பதற்கும் தொழில்நுட்ப பல்கலைக்கழக கல்லூரிகளில் பயிலுகின்ற மாணவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவாக 3,000 ரூபாவினை வழங்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

### உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி

கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது சிறுவர்களுக்கு அறிவு மற்றும் பகுப்பாய்வு திறன்களை வழங்குவதுடன் எமது நாட்டினை உயர் ஆராய்ச்சி வசதிகளைக் கொண்ட நாடாக மாற்றுகின்ற உயர் கல்வி முறைமை ஒன்றினை உருவாக்குவது எமது தூர நோக்காகும்.

எனவே, 25,000 மாணவர்களுக்கான விடுதி நிர்மாண நிகழ்ச்சித் திட்டத்தினை துரிதப்படுத்தப்பட்ட வகையில் நாம் செயற்படுத்தியுள்ளோம்.

மாணவர்களுக்கான தங்குமிட வசதிகளை வழங்குகின்ற பல்கலைக்கழக சூழலிலுள்ள வீட்டு உரிமையாளர்களுக்கு நிதி ஊக்குவிப்புகள் வழங்கப்படும்.

மாணவர்கள் தமது அன்றாட செலவினங்களை கவனிப்பதற்காக அடுத்து வருடம் ஜனவரியிலிருந்து மஹாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவினை மாதமொன்றுக்கு ரூபா 4,000 ஆக அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பொறியியல் மற்றும் தொழில்நுட்பபீடம், களனி பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்ப நிலையம், பேராதனை பல்கலைக்கழகத்தின் உயர் மருத்துவ பீடம், மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் இலத்திரனியல், பெற்றோலிய மற்றும் விமானப் பொறியியல் பீடங்கள் என்பவற்றினை விரிந்த பாடவிதானங்களுடன் தாபிப்பதற்காக நடுத்தர கால அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் நிதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கொழும்பு, வயம்ப, யாழ்ப்பாணம், ரஜரட்ட, கிழக்கு, ஊவவெலஸ்ஸ, சப்ரகமுவ மற்றும் றுகுணு பல்கலைக்கழகங்களில் முகாமைத்துவம், உணவு தொழில்நுட்பம், மிருக விஞ்ஞானம் மற்றும் விவசாயப்பீடங்களின் பாடவிதானங்களை விரிவுபடுத்துவதற்கான ஆற்றல்கள் விருத்தி செய்யப்பட்டுள்ளன. ஆயுர்வேத போதனா வைத்தியசாலைகளுக்கு முன்னுரிமை வழங்வதன் மூலம் சுதேச மருத்துவத்தில் உயர் பட்டப்படிப்பு, தொற்றாத நோய்கள் தொடர்பான ஆராய்ச்சிகள் விரிவுபடுத்தப்படவுள்ளன.

எமது கற்றறிந்த பிக்குகள், வரலாற்று துறை நிபுணர்கள் மற்றும் மாணவர்கள் வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் எமது கலாசார பௌத்த பெறுமானங்களை உலகம் முழுவதும் பகிர்ந்து கொள்ள முடியுமான வகையில் பாலி, பௌத்த கற்கைகளுக்கான பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்கு தேவையான வதிவிட மற்றும் ஆராய்ச்சி வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1 பில்லியனை நிதி ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

எமது உயர் கல்வியின் நன்மைகளை விரிவுபடுத்தும் வகையில் பொருளாதாரம், பொருளியல், சட்டம், பொறியியல், விஞ்ஞானம் மற்றும் கணிதம் போன்ற பல்துறைப் பாடங்களை ஒரே பட்டப்படிப்பில் தொடர்வதற்கு க.பொ.சாதாரணதர பரீட்சையில் தகைமை பெற்ற மாணவர்களுக்கு கலை, வர்த்தகம் மற்றும் விஞ்ஞான பாடங்களை வழங்குகின்ற பொருளியல் மற்றும் அபிவிருத்தி பொறியியல் பாடசாலை ஒன்றினை நிறுவுவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

மேலும், கொழும்பு பல்கலைக் கழகத்தினால்

புற்றுநோய் பற்றிய ஆராய்ச்சியினையும் பேராதனை மற்றும் ரஜரட்ட பல்கலைக்கழகங்களினால் சிறுநீரகங்கள் பற்றிய ஆராய்ச்சியினையும் றுகுணு பல்கலைக்கழகத்தினால் நீரிழிவு நோய் பற்றிய ஆராய்ச்சியினையும் மேற்கொள்வதற்காக ரூபா 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் ஏனைய துறைகளுக்கான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக தேசிய ஆராய்ச்சிப் பேரவைக்கு ரூபா 500 மில்லியனும் ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### நெனசல

28.01 2020 இல் அறிவு மைய பொருளாதாரத்தினை நோக்கிய எமது பயணத்தை அடைவதற்கும் 2015 இல் முழு வசதிகளுடன் கூடிய நெனசல நிலையங்களை உருவாக்குவதற்கு ரூபா 1,000 மில்லியனை ஒதுக்கீடு செய்துள்ளேன்.




பாற் பொருள் உற்பத்தி, கோழி இறைச்சி, மீன்பிடி, உணவு தொழில்நுட்பம் மற்றும் கைத்தறிப் பொருள் வடிவமைப்பு, வீட்டு அலங்காரம், பரிசில் பொருட்கள் துறைகளில் வெற்றிகரமான தொழில் முயற்சியாளர்களுடன் கிராம மட்டத்தில் நெனசல வலையமைப்பினூடாக மாகாணங்களிலுள்ள பல்கலைக் கழகங்களினால் கள மட்டத்தில் ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகூட வசதிகள் உபகரணங்கள் என்பவற்றிற்காக ரூபா 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### கலை மற்றும் கலாசாரம்

கௌரவ சபாநாயகர் அவர்களே, பிராந்தியங்களுக்கிடையில் காணப்படும் பரந்தளவிலான அபிவிருத்தியுடன் கலை மற்றும் கலாசார துறைகளுக்கான நவீன உட்கட்டமைப்பு வசதிகளையும் அரசாங்கம் விரிவுபடுத்த வேண்டியது கட்டாயமாகும்.

இப்பின்னணியில், எனது கடந்த வருட வரவு செலவுத்திட்டத்தில் கண்டி மற்றும் அநுராதபுரத்தில் கலை மற்றும் கலாசார நிலையங்கள் இரண்டினை நிறுவுவதற்கான பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்மொழிந்தேன்.

மேலும், யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் காலியில் நவீனமயப்படுத்தப்பட்ட கலாசார நிலையங்களை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

லயனல் வென்ற் கலா நிலையம் மற்றும் லும்பிணி கலை அரங்கம் என்பவற்றினை நவீனமயப்படுத்தும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.


எமது கலாசார மற்றும் மரபுரிமை தலங்களில் பொது வசதிகள், துப்பரவேற்பாடு மற்றும் கழிவு முகாமைத்துவம் என்பவற்றிற்காக ரூபா 300 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பிரச்சினைகள் தோற்றுவிக்கப்படும்

## ரணில் எச்சரிக்கை



(கொழும்பு)

**மூன்றாவது முறையாக தனக்கு போட்டியிட முடியுமா என்பது தொடர்பில் நீதிமன்ற ஆலோசனையை ஜனாதிபதி பெறுவதனூடாக அரசியலமைப்பில் புதிய பிரச்சினைகள் தோற்றுவிக்கப்படும். இவ்வாறு உயர் நீதிமன்றத்திடம் ஜனாதிபதி விளக்கம் கோரியுள்ளமை வேடிக்கையானது ஆகும். இதன் மூலம் ஜனாதிபதிக்கான அதிகாரங்களும்துஷ்பிரயோகப்படுத்தப்பட்டுள்ளன என்று எதிர்க்கட்சி தலைவரும் ஐ.தே.கவின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.**

அரசியலமைப்பு திருத்தத்தினாலேயே இத்தகைய பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்வதற்காக நிறைவேற்று அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நுகேகொட இளைஞர் கழகத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற நிகழ்வின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தான் மூன்றாவது முறையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியுமா என்பது தொடர்பில் உயர் நீதிமன்றத்திடம் விளக்கம் கோரியுள்ளார்.

அரசியலமைப்பின் 17ஆவது திருத்த சட்டத்தை நீக்கி 18 ஆவது திருத்த சட்டம் கொண்டு வரப்பட்டமையே இத்தகைய பிரச்சினைகளுக்கு மூல காரணமாகும்.

இந்நிலையில் ஜனாதிபதி உயர் நீதிமன்றத்திடம் விளக்கம் கோரியமையினூடாக அரசியலமைப்பில் புதிய பிரச்சினைகள் தோற்றுவிக்கப்படலாம்.

எனவே அதிகாரத்தை தக்க வைத்து கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையையும் துஷ்பிரயோகம் செய்கிறார்.

முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வாவின் கூற்றினை மையமாக கொண்டு தானே உயர் நீதிமன்றத்திடம் ஆலோசனை கோருவது உரிய தீர்வல்ல.

ஆகையால் ஜாதிக ஹெல உறுமயவினால் முன்வைக்கப்பட்ட 19ஆவது திருத்த சட்டத்தை அமுல்ப டுத்துவ தனூடாகவே இப்பிரச்சினைக்கு தீர்வினை பெற்றுக்கொள்ள முடியும்.


ஜனாதிபதி இவ்வாறு நீதிமன்றத்திடம் விளக்கம் கோருவது வேடிக்கையாகவுள்ளது.

எவ்வாறாயினும் ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவின் தோல்வி உறுதி செய்யப்பட்டு விட்டது. தற்போது மக்கள் வாழ வழியின்றி தவிக்கின்றனர்.

எனவே இந்த சர்வாதிகார ஆட்சியின் மீதான மக்களின் எதிர்ப்பு அதிகரிக்க தொடங்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# சர்வாதிகாரம் மிக்க ஆட்சியைத்தொடர வியூகம் அமைக்கும் ஜனாதிபதி மகிந்த

## நவ சமசமாஜக் கட்சி குற்றச்சாட்டு



மூன்றாவது தடவையாக ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ போட்டியிடுவது தொடர்பில் உயர் நீதிமன்றத்திடம் ஆலோசனை கோரியிருப்பதுமிகவும் வேடிக்கையான செயற்பாடாகும் என்று நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் மக்களிடையே போலியான நாடகம் ஒன்றை அரங்கேற்றி தமது சர்வதிகாரம்மிக்க ஆட்சியை தொடர வியூகம் வகிக்கின்றார் எனவும் அவர் குற்றம் சுமத்தினார்.

நவசமசமாஜக்கட்சியின்தலைமை காரியாலயத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டிலேயே கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் தான் மூன்றாவது முறையாகவும் போட்டியிட முடியுமா என உயர்நீதிமன்றத்திடம் ஆலோசனை வழங்கு மாறு கோரியுள்ளதானது மிகவும் வேடிக்கையான ஒன்று. தனது இரண்டாவது பதவிக்காலத்தின் 18ஆம் திருத்தத்தினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கொண்டு வந்தமையினால் மூன்றாவது முறையாக போட்டியிட முடியாது என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான நிலையில் மூன்றாவது தடவையும் தான் போட்டியிடலாமா என்பது தொடர்பில் ஆலோசனை வழங்குமாறு உயர் நீதி மன்றத்தை கோரியிருப்பது மீண்டும் தமது ஊழல் மிக்க சர்வாதிகார ஆட்சியை தொடர்வதற்கான ஒரு வியூகத்தை அவர் வகுத்து உள்ளார் என இதிலிருந்து தெளிவாக புலப்படுகின்றது.

தமது அரசியல் இலாபத்திற்காக சீனா, அமெரிக்கா, இந்தியாவை சேர்ந்த இராணுவ படைகளை வரவழைத்து பல்லாயிரம் அப்பாவி மக்களை இரக்கம் அற்ற முறையில் கொன்று குவித்து மக்களை ஏமாற்றி ஆட்சி பீடம் ஏறி இருக்கும் மகிந்த ராஜபகஷவை ஆட்சியிலிருந்து இறக்கும் பலம் படைத்த ஒருவராக எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்கவே காணப்படுகின்றார். அவருடைய ஆட்சி காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளை அவர் மேற்கொள்ளவில்லை. அவர் முடிந்தளவிற்கு நாட்டின் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக தன்னால் முடிந்த எல்லா சந்தர்ப்பங்களில் விடுதலை புலிகளிடம் பேச்சுவார்த்தைகளை நடத்தியதோடு சமாதான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டு மக்களை பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்ட ஒருவர் .அதன் போது நாமும் அவருடன் கைகோர்த்து நாட்டின் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயற்சித்தோம்.

அவ்வாறே இன்று ஊழல் மிக்க மகிந்த ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து நாட்டின் ஜனநாயகத்தை ஏற்படுத்த ரணில் விக்ரமசிங்கவுடன் ஒத்துழைத்து எமது செயற்பாடுகளை முன்னெடுக்க உத்தேசித்து உள்ளோம். இந்த முடிவானது எந்த அரசியல் இலாபத்தையும் கருத்தில் கொண்டு தீர்மானிக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## இன்று ஒரு தகவல்

### முதல் வணக்கம்

கம்பர் ஒரு காவியம் எழுதினார்.

அது எவ்வளவு அழகானது என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஆனாலும் அவர் எழுதியதை எடுத்துச் சொல்லும் விதம் இருக்கே அதுவும் ஒரு தனி அழகு தான்!

கம்பராமாயண சொற்பொழிவில் கேட்ட ஒரு விளக்கத்தைத் தான் நான் இப்பொழுது உங்களுக்குச் சொல்லப் போகிறேன்.

கம்பன் குறிப்பிட்டிருக்கும் ஒரு செய்தியை வைத்துக் கொண்டு அங்கே என்ன நடந்திருக்கும் என்று யூகித்துச் சொல்லியிருக்கிறார்கள்.

ராமர்-சீதா கல்யாணம் முடிந்தவுடன் மண மேடையிலிருந்து ராமருடன் சீதாப்பிராட்டியும் எழுந்து வந்து கொண்டிருக்கிறார்கள். மண்டபத்தில் ஏகப்பட்ட கூட்டம் கூட்டத்திலிருந்தவர்களுக்கு ஒரு விடயத்தைத் தெரிந்து கொள்ள ஆர்வம்.

அதாவது சீதையை கல்யாணம் பண்ணிக் கொண்ட இராமர் யாரை முதலில் வணங்கப் போகிறார்? என்று ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தார்கள்.

சீதை பின் தொடர இராமர் மண்டபத்தைச் சுற்றி வந்து கொண்டிருக்கிறார். தூரத்தில் தசரதர் உட்கார்ந்திருந்தார். அந்தப் பக்கமாக ராமரும் சீதையும் போகிறார்கள்.

சரி.... தசரதருக்குத் தான் முதல் நமஸ்காரம் என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் அவர்கள் அவரைத் தாண்டி அப்பால் செல்கிறார்கள்!

அடுத்ததாக இருந்தது கோசலை.

அதனால் தாயாரைத் தான் முதலில் வணங்க வேண்டும் என்று நினைக்கிறார் போல! என்று எல்லோரும் நினைத்தார்கள்.

ஆனால் இவர் தாயையும் தாண்டி அப்பால் போகிறார்.

அடுத்ததாக குலகுரு வசிஷ்டர் உட்கார்ந்திருக்கிறார்.

முதலில் குருவணக்கம் தான் என்று நினைக்கிறார் போல என்று நினைத்தார்கள். அதுவும் தப்பாக போய் விட்டது. இராமர் வசிஷ்டரையும் வணங்காமல் அப்பால் போகிறார்.

இதைப்பார்க்கிறார் விஸ்வாமித்திரர். கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்ந்தார். அவர் முகத்தில் பெருமிதம்.

அவர்களுக்கு கல்யாணம் பண்ணி வைத்ததே நாம் தானே! அதனால் நம்மிடம் தான் முதலில் ஆசீர்வாதம் வாங்க வேண்டும் என்று வருகிறார்கள். போல என்று நினைத்தார் விஸ்வாமித்திரர்.

ஆனால் அவரும் ஏமார்ந்து விட்டார். அவரையும் தாண்டிப் போய்க் கொண்டிருந்தார்கள் அவர்கள்.

சரி... அப்படியானால் யாரைத்தான் அவர்கள் முதலில் வணங்கப் போகிறார்கள்?

தூரத்தில் ஒரு அம்மா நின்று கொண்டிருந்தார். இருவரும் போய் அவரது காலில் தான் விழுந்து வணங்கினார்கள்.

யார் அந்த அம்மா?

அவர் தான் கைகேயி! இராமரின் மேல் அளவு கடந்த அன்பு வைத்திருந்தவர்.

கம்பர் தன்னுடைய இராமாயணத்தில் இராமர் கைகேயியை வணங்கியதை மட்டும் தான் குறிப்பிட்டுள்ளார்.

அதை மட்டும் வைத்துக் கொண்டு அங்கே என்ன நடந்திருக்கும் என்பதை அழகுபடக் கூறி அதற்கு ஒரு அர்த்தமும் சொல்லியிருக்கிறார் அந்தப் பேச்சாளர்.

இந்த நிகழ்வு

இராமன் கைகேயியைப் பார்த்து இப்படி சொன்னது மாதிரி இருந்ததாம்!

"என் அவதாரத்தின் இரகசியம் உனக்குத் தெரியும்! சீதையை இராவணன் தூக்கிக் கொண்டு போக வேண்டும் அதைக் காரணமாக வைத்து இராவணவதம் நடக்க வேண்டும். அதனால் என் பங்கை நான் செய்து முடித்து விட்டேன். சீதையைக் கல்யாணம் பண்ணிக் கொண்டேன். இனி மேல் உன் பங்கை நீ செய்ய வேண்டும்! எங்களை காட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டும். அதற்குத் தான் உனக்கு முதல் வணக்கம்!"

என்று சொன்னது மாதிரி இருந்ததாம்.

எழுதிய ஒரு விடயத்தை எவ்வளவு அழகாக எதுத்துச் சொல்லியிருக்கிறார் பார்த்தீர்களா?

எனக்குத் தெரிந்த இரண்டு நண்பர்கள் இருந்தார்கள்.

இருவரும் ஒரே அறையில் தங்கி சொந்தமாகச் சமைத்து சாப்பிட்டுக் கொண்டு இருப்பவர்கள்.

அதில் ஒருவனுக்கு சமையல் தெரியும். இன்னொருவனுக்கு கல்யாணம் நிச்சயமாகிவிட்டது. அவனைப்பார்த்து இவன் "ஏன்டா... உனக்கு கல்யாணம் முடிந்தவுடன் யாருக்கு முதல் நமஸ்காரம்?" என்றான்.

"முதல் நமஸ்காரம் உனக்குத் தாண்டா" என்றான் மற்றவன்

"ஏன் அப்படிச் சொல்கிறாய் ?" என்று கேட்டான் அவன்.

" நீ சமைத்ததை கொஞ்ச நாளாகவே சாப்பிட்டதால் தான் சீக்கிரமாகவே கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும்" என்று தோன்றியது.

"இந்த கல்யாணத்துக்கு காரண கர்த்தாவே நீதான்.

அதனால் உனக்குத் தான் முதல் மரியாதை" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரவாதத்தை ஒடுக்குவதில் கூட்டு முயற்சி இஸ்ரேல் பிரதமர் ராஜ்நாத் சந்திப்பில் உறுதி



(சென்னை)

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூவை சந்தித்த மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், தீவிரவாத ஒழிப்பில் இரு நாடுகள் ஒத்துழைப்பு குறித்து ஆலோசித்தார்.

தீவிரவாதம், சர்வதேச அமைதிக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக இரு நாட்டு தலைவர்களும் தெரிவித்தனர். தீவிரவாதத்தை ஒடுக்குவதில் இந்தியா - இஸ்ரேல் கூட்டு முயற்சி மேலும் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதில் ஆர்வமுடன் இருப்பதாக இஸ்ரேல் பிரதமர் தெரிவித்தார்.


இரு நாடுகளுக்கும் இடையேயான உறவை பலப்படுத்த வானமே எல்லை. என்றைக்கும் இந்தியாவுடனான நட்புறவு தொடரும் என்றார் நெதன்யாஹூ.

தொடர்ந்து பேசிய ராஜ்நாத் சிங், இஸ்ரேலுடன் வலுவான நட்புறவு கொண்டுள்ளது இந்தியா. இஸ்ரேல், இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கு மட்டும் தீவிரவாத அச்சுறுத்தல் இல்லை. தீவிரவாதம், உலக நாடுகளுக்கே மிகப்பெரிய சவாலாக உள்ளது என்றார்.

சந்திப்பின்போது, விவசாயம், பாதுகாப்பு துறைகளில் தொடர்பை பலப்படுத்துவது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது. விமான போக்குவரத்து பாதுகாப்பு, எல்லை பாதுகாப்பு, மழை நீர் சேகரிப்பு துறைகளில் இஸ்ரேல் ஏற்படுத்தியுள்ள நவீன தொழில்நுட்ப பயன்பாடுகள் குறித்து நெதன்யாஹூ, உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்குக்கு விளக்கினார்.

முன்னதாக, இன்டர்போல் பொது கூட்டமைப்பின் மாநாட்டில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ராஜ்நாத் சிங், சைபர் குற்றங்களை தடுப்பதில் தீவிரம் காட்ட வேண்டும் என மாநாட்டில் வலியுறுத்தியதாக கூறினார்.

ஜிஹாத் போராளிகள், சமூக வலைத்தளங்களை பயன்படுத்தி தங்கள் கொள்கைகளை அப்பாவி மக்களை கவர பயன்படுத்துவதாக அதை தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என ராஜ்நாத் சிங் வலியுறுத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)





# தூய்மை இந்தியா திட்டத்தை நேற்று தொடங்கினார் கமல்

நடிகர் கமல்ஹாசன் நேற்று தனது 60ஆவது பிறந்த நாளை கொண்டாடினார். தனது பிறந்த நாளையொட்டி பிரதமரின் தூய்மை இந்தியா திட்டத்தையும் சென்னையில் தொடங்கி வைத்தார் உலக நாயகன் கமல்ஹாசன்.

சென்னை, ராஜகீழ்ப்பாக்கம் அருகே உள்ள மாடம்பாக்கம் ஏரியை அவர் தூய்மைப்படுத்தும் பணியை தொடங்கினார். அனைவரும், அவரது நற்பணிமன்றத்தை சேர்ந்தவர்களும் தமிழகத்தில் மேலும் 25 ஏரிகளை தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட உள்ளதாக இப்பணியை தொடங்கி வைக்கும்போது கமல் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பா.ஜ.க மாநில தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (இ-5)

## போர்க் கப்பல் மூழ்கியது; ஒருவர் பலி,4பேர் மாயம்!



(சென்னை)

விசாகப்பட்டினத்தில் பயிற்சியில் ஈடுபட்டு வந்த இந்திய கப்பற்படைக்கு சொந்தமான போர்க்கப்பல் ஒன்று கடலில் மூழ்கி விபத்துக்குள்ளானது. இதில் ஒருவர் பலியானார். 4 பேரை காணவில்லை. கப்பலில் இருந்த 23 பேர் மீட்கப்பட்டனர்.

ஆந்திர மாநிலம் விசாக ப்பட்டினத்தில் கடற்படை தளத்தில் நேற்று இரவு பயிற்சியில் ஈடுபட்டிருந்த சிறிய ரக போர்க்கப்பல் ஒன்று கடலில் மூழ்கியது.

இது குறித்து தகவல் அறிந்ததும் மீட்புக் குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த 23 பேரை பத்திரமாக மீட்டனர்.(இ-5)

# கறுப்பு பணப் பட்டியலிலுள்ள 289 பேரிடம் பணமே இல்லை

**உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட கறுப்பு பண விவகாரத்துடன் தொடர்புடைய பட்டியலில் உள்ள 289 பேரின் கணக்கில் பணமே இல்லை என்று தெரிய வந்துள்ளது. இதனால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாமல் சிறப்பு புலனாய்வு குழு திணறி வருகிறது.**




வெளிநாட்டு வங்கிகளில் இந்தியர்கள் சிலர் பதுக்கி வைத்துள்ள பலலாயிரக்கணக்கான கோடி ரூபாய் கறுப்பு பணத்தை மீட்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த விசாரணையை மேற்பார்வையிட ஓய்வு பெற்ற நீதிபதிகள் எம்.பி.ஷா, அரிஜித் பசாயத் ஆகியோர் அடங்கிய சிறப்பு புலனாய்வு குழுவை மத்திய அரசு அமைத்தது. அக்குழு, உயர் நீதிமன்றில் கண்காணிப்புடன் செயற்பட்டு வருகிறது.

சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனீவா நகரில் உள்ள எச்.எஸ்.பி.சி. வங்கியில் கறுப்பு பணம் வைத்துள்ள 600இற்கும் மேற்பட்ட இந்தியர்களின் பெயர் அடங்கிய பட்டியல், பிரான்ஸ் நாடு மூலமாக இந்தியாவுக்கு ஏற்கனவே கிடைத்தது. அந்த பட்டியலை நீதிமன்றில் சிறப்பு புலனாய்வு குழு சமர்ப்பித்துள்ளது.

இந்நிலையில், அந்த பட்டியலை ஆய்வு செய்தபோது, எதிர்பாராத திருப்பம் ஏற்பட்டது.

பட்டியலில், 289 பேரின் வங்கி கணக்கில் பணமே இல்லை என்று, சிறப்பு புலனாய்வு குழு கண்டுபிடித்துள்ளது. அதிலும், அவர்களில் 122 பேரின் பெயர்கள், அதே பட்டியலில் இரண்டு இடத்தில் வருகின்றன.

மேலும், இந்த கணக்குகளை இயக்கியது தொடர்பாக எந்த விபரங்களும் இல்லை. அந்த கணக்குகள் எப்போது தொடங்கப்பட்டது, எப்போதெல்லாம் பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டது என்பன போன்ற விபரங்கள் எதுவும் இல்லை.

இதனால், சம்பந்தப்பட்ட கணக்குக்கு உரியவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாமல் சிறப்பு புலனாய்வு குழு திணறி வருகிறது. இது, நடவடிக்கை எடுப்பதற்கு முட்டுக்கட்டையாக அமைந்துள்ளது. (இ-5)

### பாரதச் செய்தி

# மோடியின் அமைச்சரவை விரிவடையும் சாத்தியம்

(சென்னை)

இந்தியாவில் பாரதிய ஜனதாக் கட்சி தலைமையிலான ஆட்சியமைந்து ஐந்து மாதங்கள் கடந்துள்ள நிலையில்,' பிரதமர் நரேந்திர மோடி தனது அமைச்சரவையை இந்த வாரஇறுதியில் மேலும் விரிவுபடுத்தவுள்ளதாக ஊடகத் தகவல்கள் கூறுகின்றன.

கடந்த மே மாதம், 7 பெண்கள் அடங்கலாக 45 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களாக பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

ஆறுக்கும் மேற்பட்ட அமைச்சர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட அமைச்சுப் பொறுப்புக்களை வகிக்கின்றனர்.

குறிப்பாக, அமைச்சர் அருண் ஜெட்லி முக்கிய இரண்டு பொறுப்புக்களான பாதுகாப்பு மற்றும் நிதி அமைச்சுக்களை வகிக்கின்றார்.

நரேந்திர மோடி மேலும் 10 புதிய அமைச்சர்களை தனது அமைச்சரவையில் சேர்த்துக்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பாஜக ஆட்சியிலுள்ள கோவா மாநிலத்தின் முதலமைச்சர் மனோகர் பரிகார் புதிய பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்படலாம் என்று செய்திகள் கூறுகின்றன.

கடந்த 30 ஆண்டுகாலத்தில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மிகப்பெரிய வெற்றியை பாஜக கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பெற்றமை குறிப்பிடத்தக்கது.(இ-5)

# தமிழகத்தில் பொம்மை ஆட்சி நீங்கி இரட்டை ஆட்சி நடக்கிறது-ஸ்டாலின்

தமிழகத்தில் பொம்மை ஆட்சி போய், பினாமி ஆட்சியும் போய் தற்போது இரட்டை ஆட்சி நடக்கிறது. எந்த ஆட்சியிலும் இல்லாத அளவுக்கு தமிழகத்தில் பால் விலை உயர்ந்துள்ளது. மின்சார கட்டணம் உயரவுள்ளது என்று திமுக பொருளாளர் மு.க.ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

தஞ்சை புது ஆற்றுப்பாலத்தில் உள்ள திருமண மண்டபத்தில் தஞ்சை மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டத்தில் தி.மு.க.பொருளாளர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர், இந்த கூட்டத்தில் நிர்வாகிகள் கூறிய கருத்துக்களை ஒட்டு மொத்தமாக நாம் பார்த்தால், எதிர்வரும் 2016 இல் தமிழகத்தில் மீண்டும் கருணாநிதி தலைமையிலான ஆட்சி அமைய வேண்டும் என்பதுதான். கல்லூரி மாணவ-மாணவிகளை நான் சந்தித்து பேசியபோது அவர்கள் ஆர்ப்பாட்டம், போராட்டம் என்றால் எங்களையும் அழையுங்கள், தி.மு.கவோடு இணைந்து போராட நாங்களும் தயாராக உள்ளோம் என்று தெரிவித்தனர்.

அவர்கள் கூறியதைப்போல் இனி இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். அவர்களுக்கு கட்சிப்பணியில் வாய்ப்பு கொடுக்க வேண்டும். கட்சி பணிகள் செய்பவர்களுக்கு பதவிகள் கொடுக்காவிட்டாலும் அவர்களை தட்டி கொடுக்க வேண்டும். தகுதியானவர்களுக்கு பதவிகள் கொடுககப்பட வேண்டும் என்பதை ஆய்வு மூலம் நான் தெரிந்து கொண்டேன்.

தமிழகத்தில் பால் விலை உயர்த்தப்பட்டுள்ளது.' இதனால் ஏழை, எளியோர், நடுத்தர மக்கள், குழந்தைகள், முதியோர்கள் என அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். மக்கள் நலனை கருத்தில் கொள்ளாமல் அவர்களுக்கு எதிரான வழியில் செயற்படும் ஆட்சிக்கு எதிர்வரும் 2016 தேர்தலில் பாடம் புகட்ட வேண்டும். 2016இல் தமிழகத்தில் கருணாநிதி தலைமையில் தி.மு.க. ஆட்சி அமைத்திட வேண்டும் என்றார் ஸ்டாலின். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய வெங்காய செய்கை 100 ஏக்கரில்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் அனுசரணையுடன் SOLID திட்டத்தின் கீழ் சாதகமற்ற காலத்தில் பெரிய வெங்காய செய்கை 100 ஏக்கரில் அமுல்படுத்தப்படவுள்ளதாக மன்னார் மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதசந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்த கள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்பு மன்னார் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் விவசாயிகளுக்கான இது தொடர்பான பயிற்சி வழங்கப்படும். விவசாயப் போதனாசிரியர் பிரிவு, பயிற்சி வகுப்பு நடைபெறும் இடம், திகதி ஆகியவற்றை அவர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை மறுதினம் திங்கட்கிழமை பெரிய புள்ளச்சி பொற்கேணி விவசாயப் போதனாசிரியர் பிரிவில் உள்ள விவசாயிகளுக்கு பண்டார வெளியில் அமைந்துள்ள கிராம அபிவிருத்திச் சங்க கட்டத்திலும் கொண்டச்சி விவசாயப் போதனாசிரியர் பிரிவிலுள்ள விவசாயிகளுக்கு மறிச்சிக்கட்டியில் அமைக்கப்பட்டுள்ள கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டத்திலும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை நானாட்டான், வஞ்சியன்குளம் ஆகிய விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் உள்ள விவசாயிகளுக்கு நானாட்டானில் அமைக்கப்பட்டுள்ள கமநல அபிவிருத்தி நிலையங்களிலும் மறுநாள் வியாழக்கிழமை முருங்கன், ஆட்காட்டி வெளி ஆகிய விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் உள்ள விவசாயிகளுக்கு முறையே நானாட்டான், பால பெருமாள் கட்டு ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடங்களிலும் அன்றைய தினம் மாந்தை விவசாயப் போதனாசிரியர் பிரிவில் மாந்தையில் அமைக்கப்பட்டுள்ள கமநல அபிவிருத்தி நிலையத்திலும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இலுப்பைக் கடவை, விடத்தல் தீவு ஆகிய விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் முறையே கணேசபுரம், ஈச்சளவக்கை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடங்களிலும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பேசாலை, மன்னார்தீவு ஆகிய விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் முறையே சின்னகரிசல், தரவன் கோட்டை ஆகிய இடங்களில் அமைந்துள்ள கிராம அபிவிருத்தி சங்கக்கட்டடங்களிலும் நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்குறிப்பிட்ட திகதிகளில் நடைபெறும் பயிற்சி நெறியில் குறித்த பகுதிகளிலுள்ள பயனாளிகள் தவறாது பங்கேற்று இத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் கேட்டுள்ளார். (அ-2)

## நிர்வாகக் குழு கூட்டம் நாளை

அகில இலங்கை ஆசிரிய ஆலோசகர் சங்க நிர்வாகக் குழு கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொழும்பு பொறளை சுசமயவர்த்தன மகாவித்தியாலயத்தில் மேற்படி சங்கத் தலைவர் ரோகண அத்தபத்து தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் புதிய ஆசிரிய ஆலோசகர்களை சேவைக்குள் உள்ளீர்ப்பது தொடர்பிலும் பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்படவுள்ளது.

இக் கூட்டத்தில் மேற்படி சங்கத்தின் கல்வி வலயங்களினதும் சகல பிரதிநிதிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-2-277)

## கலைஞர்கள் தெரிவுப் போட்டி

வவுனியா வேப்பங் குளத்தில் அமைந்துள்ள முத்தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில் சிறந்த கலைஞர்களை தெரிவு செய்வதற்கான போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதன்பிரகாரம் வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களில் சிறந்து விளங்கும் கலைஞர், பாடகர், நகைச்சுவை கலைஞர், ஓவியர், நாட்டிய கலைஞர், அறிவிப்பாளர், சமய சொற்பொழிவாளர் ஆகியோரிடமிருந்து இப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. போட்டியாளர்கள் விண்ணப்பப்படிவங்களை முத்தமிழ்ச் சங்கம், இல.9/1 6ஆம் ஒழுங்கை, வேப்பங்குளம், வவுனியா எனும் முகவரிக்கு இம் மாத முடிவிற்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

அத்துடன் மேலதிக விபரங்களை 024 561 6009 அல்லது 077 324 0323 எனும் தொலைபேசி இலக்கங்களூடாக பெற்றுக் கொள்ளலாம். எந்த பிரதேச செயலக பிரிவிலிருந்து கூடுதலான விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப் பெறுகின்றதோ அப்பிரதேச செயலக பிரிவில் போட்டிகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2-272)

## கற்பகதரு பரம்பரை திட்டத்தின் கீழ் தென்னங்கன்றுகள் வழங்கல்

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு பிறந்த குழந்தைகளின் பெற்றோர்களுக்கு தலா 2 தென்னங்கன்றுகள் வழங்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரா நேற்று முன்தினம் தெரிவித்தார.

கற்பகதரு ப்ரம்பரை (கப்புறுக பரப்புர) திட்டத்தின் கீழ் இந்த தென்னங்கன்றுகள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வணக்கஸ்தலங்களுக்கும் தலா 10 தென்னங்கன்றுகள் வீதம் வழங்கப்படவுள்ளன.

ஆகையால் வணககஸ்தலங்களின் நிர்வாகிகள் கடிதம் மூலம் விண்ணப்பித்து இந்த தென்னங்கன்றுகளை பெற்றுக் கொள்ள முடியும். தென்னங்கன்றுகள் வழங்கும் நடவடிக்கைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)



பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் வடமாகாணத்தில் முதன் முறையாக இவ்வாண்டு தேசிய வாசிப்பு மாத நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. இதற்கமைய வாசிப்பினை ஊக்குவிப்போம் எனும் கருப் பொருளில் கிளி/பளை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் வீதி தெருக்கூத்தினை அண்மையில் பளை பிரதேசத்தின் முக்கிய இடங்களில் நடத்தியிருந்ததைப் படங்களில் காணலாம். (படங்கள்:-சிவநகர் செய்தியாளர்)




## விவசாயிகள் பதிவுகளை மேற்கொள்க!

கிளிநொச்சி மாவட்டம் கந்தன் குளம், அம்மாள் குளம், கனகபுரம் குளம் ஆகிய குளங்களின் கீழ் நெற்பயிர் செய்கையை மேற்கொள்ள விரும்பும் காணி உரிமை உள்ள விவசாயிகள் தமக்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதன்படி கரைச்சி பிரதேச செயலக காணிப்பிரிவில் இதற்கான விண்ணப்பப்படிவத்தைபெற்று பூர்த்தி செய்து இம்மாத இறுதிக்குள் காணிப்பகுதியில் ஒப்படைக்குமாறும் இப்பதிவின் பிரகாரம் இவர்களுக்கான காணி உறுதிப்பத்திரம் வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-254)

## பண்பாட்டு பெருவிழாவுக்கு முன்னேற்பாடு

கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா மிக விரைவில் நடத்தப்படுவதற்கான ஒழுங்குகளை மாவட்ட பண்பாட்டுப் பேரவை ஆரம்பித்துள்ளது.

மாவட்டத்தின் தொன்மையைக் கூறும் நூல் ஒன்றும் பண்பாட்டு விழாவின் போது வெளியிடப்படவுள்ளது.

வழமைபோலமாவட்டத்தின் கலைத்துறைக்கு பங்களிப்பு செய்த கலைஞர்கள் இவ் விழாவில்கௌரவிக்கப்படவுள்ளனர். பாரம்பரிய கலைகளுடன் கூடியதாக பண்பாட்டு விழாவை நடத்துவதற்குரிய துரித ஏற்பாடுகளை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் மேற்கொண்டுவருகிறார். (அ-2-254)

## 40இலட்சம் ரூபாவில் 64 செயற்றிட்டங்கள்

### நிதி ஒதுக்கினார் பசுபதிப்பிள்ளை

(கிளிநொச்சி)

இவ்வாண்டுக்கான வடக்கு மாகாண அபிவிருத்தி திட்டத்தில் வடமாகாண சபை உறுப்பினர் சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளையின் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை 40 இலட்சம் ரூபாவில் 64 செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்கமைய உள்ளூராட்சி திணைக்களத்தின் கீழ் இயங்கும் அமைப்புகளுக்கு 10 செயற்றிட்டங்களுக்கு 9 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாவும் கல்வி திணைக்கள பாடசாலைகளுக்கு 9 செயற்றிட்டங்களுக்கு 9 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாவும் கிராம அபிவிருத்தி திணைக்கள அமைப்புக்களின் 14 செயற்றிட்டங்களுக்கு 8 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவும் கலாசார அமைப்புக்களின் 5 செயற்றிட்டங்களுக்கு 3 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவும் கூட்டுறவு திணைக்கள அமைப்புகளின் இரு செயற்றிட்டங்களுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் விளையாட்டுதிணைக்கள அமைப்புக்களின் 19 செயற்றிட்டங்களுக்கு 3 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் விவசாய திணைக்களத்தின் மூன்று செயற்றிட்டங்களுக்கு 2 இலட்சம் ரூபாவும் தொழிற்றுறை திணைக்களத்தின் ஒரு செயற்றிட்டத்திற்கு ஒரு இலட்சத்து 25 ஆயிரம்ரூபாவும் சுகாதார திணைக்களத்தின் ஒரு செயற்றிட்டத்திற்கு [illegible]

## குடிநீர் தேடி சாந்தபுரம் கிராம மக்கள் அலைச்சல்

### குடிநீர் வழங்குமாறும் கோரிக்கை

(கிளிநொச்சி)

வரட்சியின் போது சாந்தபுரம் கிராமத்திற்கு வழங்கப்பட்டுவந்த குடிநீர் தற்போதைய மழையை காரணம் காட்டி நிறுத்தப்பட்டுள்ளதாக அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ் விடயம் தொடர்பில் மேலும் தெரியவருதாவது,

நாட்டில் நிலவிய வரட்சி காரணமாக குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது.

இந்நிலையில் கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் ஏற்பட்ட குடிநீர் தட்டுப்பாட்டை கடந்த 5 மாதங்களாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் ஏனைய தொண்டு நிறுவனங்கள் பௌசர்கள் மூலம் இம் மக்களுக்கான குடிநீர்தேவையை பூர்த்திசெய்தன.

சாந்தபுரம் கிராமத்தில் எண்ணூறு குடும்பங்கள் வாழ்ந்து வரும்நிலையில் இவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த குடிநீர் தற்போது மழை பொழிந்ததை காரணம் காட்டி நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் மீண்டும் குடிநீருக்கு அலைந்து திரியும் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது மழை பெய்திருந்த போதும் இக் கிராமத்திலுள்ள கிணறுகளுக்கு போதிய நீர் கிடைக்கவில்லை. இதனால் கிணறுகளில் குடிநீரை பெற்றுக் கொள்ள முடியவில்லை.

எனவே தொண்டு நிறுவனங்கள்மீண்டும்குடிநீர்வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

இது தொடர்பாக இப் பகுதி மக்கள் கிராம அலுவலரிடம் சென்று முறையிட்ட போது,

தற்போது நீர் வழங்கும் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இக் கிராமத்தை நேரில் வருகை தந்து பார்வையிடுவதன் மூலம் மக்களுக்கான குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியுமென மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (அ-2-271)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ்.ஐ.எஸ் அராஜகம்

## 3 நாட்களில் 17 பேர் படுகொலை

(டமாஸ்கஸ்)

**சிரியாவில் தீவிரவாத தாக்குதல் நடத்திவரும் ஐ.எஸ். ஐ.எஸ் என்று அழைக்கப்படும் படுபாதகச் செயல்களில் ஈடுபட்டுவரும் தீவிரவாத அமைப்பினால் கடந்த 3 நாட்களில் மட்டும் பெண்கள் உட்பட 17 பேர் கழுத்து அரிந்து படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என போர் கண்காணிப்புக்குழு அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது.**



சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதப் படைகளுக்கும் குர்து படைகளுக்கும் இடையே கடும் போர் நடைபெற்று வருகிறது. சிரியாவின் கொபேனி உள்ளிட்ட நகரங்களை தாக்குதல் நடத்தி ஐ.எஸ்.ஐ.எஸ். கைப்பற்றி வருகிறது.

இந்த நிலையில் அந்த அமைப்பு கடந்த 3 நாட்களில் மட்டும் 17 சிரிய நாட்டவரை தலையை வெட்டி அலது சிலுவையில் அறைந்து படுகொலைகளை செய்துள்ளதாக சிரியாவில் போர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் சர்வதேச அமைப்பு தெரிவித்ததாக சினுவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும், தற்போது சிரியாவின் தயர்-அல்-சவூரியின் பெரும்பாலான பகுதிகளை கைப்பற்றி ஈராக் எல்லைக்கு நெருங்கி உள்ளனர்.

இந்த பகுதிகளிலும் சிரியாவின் அல்-ரக்கா பகுதிகளிலும் இருக்கும் மக்களை அவர்கள் அச்சுறுத்தி தங்களது கட்டளைகளை நிறைவேற்றும்படியும் அறிவுறுத்துகின்றதாகவும் அந்த தகவலில் கூறப்பட்டுள்ளது. (இ-5)

## பிரிட்டன் நாடாளுமன்றில் மகாத்மா காந்திக்கு சிலை

பிரிட்டன் நாடாளுமன்ற சதுக்கத்தில் மகாத்மா காந்தியின் வெண்கலச் சிலையை அமைக்க அந்நாட்டு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

லண்டனின் வெஸ்ட்மின்ஸ்டர் பகுதியில் உள்ள நாடாளுமன்ற சதுக்கத்தில் உலகப் புகழ்பெற்ற தலைவர்களின் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. இனவெறிக்கு எதிராகப் போராடிய தென்னாப்பிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் சிலையும் உள்ளது.

இதன் அருகில் காந்தி சிலையை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு வெஸ்ட்மின்ஸ்டர் நகர கவுன்சில் அனுமதி அளித்துள்ளது. பிலிப் ஜேக்சன் என்பவரால் வெண்கலத்தில் வடிவமைக்கப்பட உள்ளது இந்த காந்தி சிலை. இதில் இந்திய பாரம்பரிய உடையான வேட்டியும், துண்டும் அணிந்தபடி காந்தியின் உருவம் பொறிக்கப்படவுள்ளது. (இ-5)

## நரேந்திர மோடிக்கு இம்ரான் கான் பாராட்டு

வெளிநாட்டு வங்கிகளில் முடங்கிக் கிடக்கும் கறுப்பு பணத்தை திருப்பிக் கொண்டு வருவதில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் செயற்பாடுகள் பாராட்டுக்குரியவை என பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார். நரேந்திர மோடி மீது பாகிஸ்தான் எத்தகைய விமர்சனத்தை வைத்தாலும், மோடி உண்மையானவர்" என இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

எல்லையில் இந்திய இராணுவம் தாக்குதல் நடத்தி வருவதாக பாகிஸ்தான் மோடி அரசை கடுமையாக விமர்சித்து வரும் நிலையில், பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவர் மோடியை பாராட்டிப் பேசியிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




## எகிப்து ரயிலில் குண்டு வெடிப்பு; இரு பொலிஸார் ஸ்தலத்தில் பலி!

எகிப்தில் முகம்மது முர்சி தலைமையிலான ஆட்சி கடந்த ஆண்டு நீக்கப்பட்டதில் இருந்து அங்கு வன்முறை சம்பவங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. இந்தநிலையில் மெனுபியா மாகாணத்தில் உள்ள நைல் டெல்டா புகையிரத நிலையத்தில நேற்று முன்தினம் புகையிரதத்தில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்தது. இதில் 2 பொலிஸார் உடல் சிதறி பரிதாபமாக உயிரிழந்தனர். 11 பேர் படுகாயத்துடன் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.


இந்த சம்பவம் நடந்த ஒரு மணி நேரம் கழித்து கெய்ரோ மெட்ரோ புகையிரத நிலையத்தில் சிறியரக குண்டு வெடித்தது. இதில் 3 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த தாக்குதலுக்கு எந்த அமைப்பும் உடனடியாக பொறுப்பேற்கவில்லை. கடந்த மாதம் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் காசா முனை எல்லையையொட்டி நடத்திய தாக்குதலில் 33 படை வீரர்கள் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-5)


## விளாடிமிர் புடின் தப்பவே முடியாது; அவுஸ். பிரதமர் டோனி எச்சரிக்கை

உக்ரைன் மீது பறந்த விமானத்தை ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகள் சுட்டுக் கொன்ற விவகாரம தொடர்பான பேச்சுவார்த்தையில் இருந்து ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தப்ப முடியாது என்று அவுஸ்திரேலியப்பிரதமர டோனி அபோட் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூலை மாதம் உக்ரைன் மீது பறந்த மலேசிய விமானம் எம்.எச்.17 ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகளால் தாக்கப்பட்டது. அதனால் அதில் பயணித்த 298 பயணிகளும் உயிரிழந்தனர். இந்த விபத்தில் 38 அவுஸ்திரேலியர்களும் பலியாயினர். இந்த விபத்தில் பலியான அவுஸ்திரேலியர்கள் தொடர்பாக விளாடிமிர் புடினுடன் அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் ஜி20 நாடுகளின் மாநாட்டில் தான் பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாகக் கடந்த மாதம் அபோட் தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது,





"ஜி20 மாநாட்டுக்கு இடையூறு செய்ய விரும்பவில்லை. அதனாலமாநாடு நடப்பதற்கு முன்பே புடினுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட விரும்புகிறேன்.

அவர் கட்டாயம் இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கு கொள்ள வேண்டும். இதிலிருந்து அவர் தப்ப முடியாது" என்று கூறியுள்ளார். ஆனால்இப்போது வரை ரஷ்யாவிடமிருந்து இதற்கு எந்தப் பதிலும் வரவில்லை. (இ-5)

## அனகொண்டா உயிருடன் விழுங்கப் போகும் நபராம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவை சேர்ந்த இளைஞர் ஒருவர் சமூக வலைத்தளமான டுவிட்டரில், "நான் அனகோண்டா உயிரோடு விழுங்கவிருக்கும் முதல் நபராக இருப்பேன்" எனும் வீடியோவை பதிவேற்றம் செய்துள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இயற்கை ஆர்வலர், தயாரிப்பாளர் மற்றும் சாகசக்காரர் என தெரிவிக்கப்பட்டுள்ள பால் ரோசொலி எனும் நபர், டுவிட்டரில் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்த ஒரு வீடியோவில், நான் அனகோண்டா உயிரோடு விழுங்கவிருக்கும் முதல் நபராக இருப்பேன என தெரிவித்துள் ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்தியில், டிஸ்கவரி தொலைக்காட்சியில் டிசெம்பர் மாதம் ஒளிபரப்பாக இருக்கும் "ஈட்டன் லைவ்" எனும் நிகழ்ச்சிக்காக தயாரிக்கப்பட்ட புரோமோ இது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட உடையை அணிந்திருக்கும பால்ரோசொலி, அனகோண்டாவால் உயிரோடு விழுங்கப்படுவாரென கருதப்படுகிறது.

இது தொடர்பாக பால் ரோசொலி அவரது டுவிட்டர் பதிவில், நான் எப்போதும் விலங்குகளை துன்புறுத்த மாட்டேன். இது எப்படி சாத்தியம் என்பதை அறிய நீங்கள் ஈட்டன் லைவ் நிகழ்ச்சியை பார்க்கவேண்டும் என தெரிவித்துள்ளார். இந்த நிகழ்ச்சி பாம்புக்கு பாதிப்பு ஏற்படுத்தும் விதமாக உள்ளதால் இதனை டிஸ்கவரி கைவிடவேண்டுமென விலங்கு நல ஆர்வலர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்த முட்டாளை உயிரோடு விழுங்கச்செய்து, அதன பின்பு வெளியே எடுக்க அனகோண்டாவின் மொத்த சக்தியும் போய் விடும். கேளிக்கைக்காக விலங்குகளை பயன் படுத்தும் போது அவை பாதிப்பிற்கு ஆளாவதை மறுக்க முடியாது என விலங்கு நல ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இங்கிலாந்தில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் போராட்டத்தில் குதித்தனர்



(லண்டன்)

இங்கிலாந்தில் முதலாளித்துவத்துக்கு எதிராக பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். உலகம் முழுவதும் ஏற்பட்டு வரும் பல்வேறு நெருக்கடிகளுக்கு முதலாளித்துவ கொள்கைகளே காரணம். இதனை முடிவுக்கு கொண்டு வரவேண்டும்.

[illegible]
[illegible] கிடைக்கப்பெற வேண்டும்.

மேலும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் தொழிலாளர்கள் மீது கைவைப்பதை அனுமதிக்க முடியாது. பொதுநல திட்டங்களுக்கான நிதியை வெட்டி சுருக்குவதை கைவிட வேண்டும்.

ஒரு சிறுபிரிவினரின் கொள்ளை இலாப நலனுக்காக பெரும்பான்மையானோர் சுரண்டப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என கோஷங்களை முன் வைத்து உலகம் முழுவதும் பரவலாக போராட்டங்கள் நடைபெற்று வருகிறது.

அதன் ஒரு பகுதியாக இங்கிலாந்து தலைநகர் லண்டனில் உள்ள வெஸ்ட்மினிஸ்டர் மாளிகை முன்பு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கடந்த புதன்கிழமை இரவு திடீரென ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

இதில் இங்கிலாந்தின் முக்கிய பிரமுகர்கள் ரசல் பிராண்ட், விவினி வெஸ்ட்வுட் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் முகமூடி அணிந்து இருந்தார்கள். ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களை பொலிஸாா விரட்டியடிக்க முயன்றனர்.

கடந்த புதன்கிழமை இரவு முழு வதும் லண்டன் நகரின் பல இடங்களில் ஆர்ப்பாட்டம் நடை பெற்றது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஈரான் பெண்கள் மீது அசிட் வீசித்தாக்குதல்

(பெய்ரூட்)

ஈரான் நாட்டில், இஸ்லாமிய மத வழக்கங்களை, முறையாக கடைப்பிடிக்காத பெண்களின் முகத்தில், அசிட் தாக்குதல் நடத்தப்படுவதால், அந்நாட்டு பெண்கள் அச்சமடைந்துள்ளனர். பழைமைவாதத்துடன் மோதி வரும், அந்நாட்டு ஜனாதிபதி ஹசன் ருஹானி, நன்னடத்தை விதிகளை மேம்படுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தும், பழைமைவாதிகள கோரிக்கையை ஏற்கவில்லை.

அந்நாட்டு பாராளுமன்றத்தில், இஸ்லாமிய பெண்களுக்கு கடுமையான உடை கட்டுப்பாடுகள் விதித்தும், மத வழக்கங்களை முறையாக கடைப்பிடிப்பது குறித்தும் சட்டம் இயற்றப்பட்டது. இதையடுத்து, மத்திய ஈரானின், இஸ்பஹான் நகரின் பரபரப்பான வீதியில் சென்று கொண்டிருந்த முஸ்லிம் பெணகள் மீது, நான்கு முறை அசிட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உங்கள் கைகளோடு உங்கள் மனமும் பரிசுத்தமாக இருக்க வேண்டும்.
-கிரீஸ் பழமொழி-

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# வட மாகாண விவசாய அமைச்சுக்கு நீர்த்தாங்கி வாகனங்கள் அன்பளிப்பு

பளையில் காற்று மின் ஆலைகளை நிர்மாணித்துவரும் யூலிவர் மற்றும் பீற்றாவர் என்ற இரண்டு தனியார் நிறுவனங்கள் இணைந்து வடக்கு விவசாய அமைச்சுக்கு 20 மில்லியன் ரூபா பெறுமதியான ஆறு தண்ணீர்த்தாங்கி வாகனங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளன. நேற்று வெள்ளிக்கிழமை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடைபெற்ற இவ் வாகனங்களின் கையளிப்பு நிகழ்ச்சியில் வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்துகொண்டு வாகனங்களை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பளை பிரதேச செயலர் பிரிவில் புலோப்பளையிலும் வள்ளி முனையிலும் யூலிவர், பீற்றாவர் என்ற இரண்டு தனியார் நிறுவனங்கள் காற்று மின் ஆலையை நிர்மாணித்து வருகின்றன. இந்நிறுவனங்கள் வடக்கு மாகாணத்தின் வரட்சி நிவாரணம், குடிநீர் வழங்கல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற திட்டங்களுக்கு வணிக நிறுவனங்களுக்குரிய சமூகக்கடப்பாடாக நிதி உதவி வழங்கும் ஒப்பந்தம் ஒன்றை வடக்கு மாகாண சபையுடன் செய்துகொண்டுள்ளன. 20 வருடங்களுக்கு நடைமுறையில் இருக்கும் இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் முதல் 10 வருடங்களுக்கு ஆண்டுதோறும் 20 மில்லியன் ரூபாய்களையும், அடுத்த 10 வருடங்களுக்கு ஆண்டுதோறும் 23 மில்லியன் ரூபாய்களையும் வடக்கு மாகாண விவசாய, கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சின் வேலைத்திட்டங்களுக்கு நன்கொடையாக இந்நிறுவனங்கள் வழங்கவுள்ளன. இதன் தொடக்கமாக, 2014 ஆம் ஆண்டுக்குரிய 20 மில்லியன் ரூபாய் நன்கொடையில் 06 தண்ணீர்த் தாங்கி வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 05 வாகனங்கள் நேற்று கையளிக்கப் பட்ட நிலையில், மற்றைய வாகனம் விரைவில் கிடைப்பதற்குரிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தண்ணீர்த்தாங்கி வாகனங்கள் வடக்கு மாகாண விவசாய அமைச்சு மேற்கொண்டுவரும் குடிநீர் விநியோகச் சேவையில் பயன்படுத்தப்படவுள்ளன.

காற்று மின் உற்பத்தி நிறுவனம் வடக்கு மாகாணசபையுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் நிறுவனத்தின் பணியாளர்களில் 80 விழுக்காடு பேர் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களாக இருத்தல்வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காற்று. மின்னாலை வடக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டதன் பின்னர் வடக்கில் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரும் மூலதனத்துடன் கூடிய முதலாவது தனியார் முதலீடு என்பதோடு, இந்நிறுவனங்களின் நன்கொடையே வடக்கு மாகாணசபைக்குக் கிடைத்த முதலாவது பெரும் நன்கொடை

### 20 மில்லியன் பெறுமதியானவை

என்பதும் குறிப்பிடத்தக்கது. வாகனங்களைக் கையளிக்கும் நிகழ்ச்சியில் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், யூலிவர், பீற்றாவர் நிறுவனங்களின் உயர்மட்டப் பிரதிநிதிகள், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் யு.எல்.எம ஹால்தீன், மாகாண நீர்ப்பாசனப்பணிப்பாளர் சோ.சிவபாதம், உதவி நீர்ப்பாசனப்பணிப்பாளர் சோ.சண்முகா நந்தன், ப்ரதி நீர்ப்பாசனப்பணிப் பாளர் ந.சுதாகரன், உதவி விவசாயப் பணிப்பாளர் ஜெயதேவி ஜெகநாதன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-5)

## உளநல மருத்துவர்களுக்கு ஓர் அன்பு மடல்

உளநலம் சார்ந்த மருத்துவர்களுக்கு அன்பு வணக்கம். சுகம் என்பதில் உள சுகம் மிகவும் முக்கியமானது. உளசுகம் என்று பேசும் போதெல்லாம் அதனோடு சேர்ந்து தியானம், ஆன்மிகம், யோகா, கலை கலாசாரம், பண்பாடு, விழுமியம் என்ற விடயங்கள் சேர்ந்து கொள்ளும். எனவே உள மருத்துவம் என்பது தனித்து சிகிச்சை அளித்தல் என்பதோடு நின்றுவிடுவதில்லை.

மாறாக உளச்சுகத்திற்கு ஆரோக்கியம் தரவல்ல அத்தனை சமூக, பொருளாதார, அரசியல் நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதும் அவற்றை நிலைத்திருக்கச் செய்வதும் உளநலம்சார் நடவடிக்கையாகும்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்ற பழமொழியானது உளநிலை சார்ந்தது என்பதை நாம் புரிதல் வேண்டும். அகம் என்பது வீட்டைக் குறிப்பதாகும். வீட்டில் இருக்கக் கூடிய மகிழ்ச்சிகரமான சூழ்நிலைகளை ஒருவருடைய முகத்தில் காணமுடியும்.

அகம் (வீடு) ஒத்துவரவில்லையாயின் அதன் தாக்கத்தை முகத்தில் காணமுடியும் என்பதைத் தெளிவுபடுத்துவதே குறித்த பழமொழியாகும். இதேபோல் நாட்டுச் சூழலும் அமைதி, சமாதானம், பிரேமை மிக்கதாக இருத்தல் அவசியம்.

எனினும் நம் நாட்டில் நடந்தவை-நடந்து கொண்டிருப்பவை எங்கள் மக்களைக் கடுமையாகப் பாதித்துள்ளதென்பது மறுக்க முடியாத உண்மை.

இன்றுவரை காணாமல் போன தங்கள் பிள்ளைகளைத் தேடி அலையும் பெற்றோர்களின் பரிதாபம்; தந்தையர்களை இழந்த குடும்பங்களின் அவலம்; இளம் விதவைகளின் சோகம் என்றவாறு துன்பக் கோடுகள் எங்கள் மண்ணில் புரையோடி உள்ளன.

1995களில் யாழ்.குடாநாட்டில் ஏற்பட்ட இடப்பெயர்வின் பின்னரான தமிழ் மக்களின் வாழ்வில் உளப் பாதிப்புகள் நிறையவே இருந்தன என்ற உளமருத்துவ நிபுணர் தயா சோமசுந்தம் அவர்கள் அப்போது வெளியிட்ட அறிக்கையும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறவருகின்ற நோயாளர்களில் 75 வீதமானவர்கள் உளத்தாக்கத்தினால் ஏற்படக்கூடிய மெய்ப்பாடு எனும் வெளிப்பாட்டிற்கு ஆளாகி உள்ளனர் என்ற தகவலும் இங்கு நோக்குதற்குரியது.

இப்போதும் யாழ்ப்பாணத்தில் இருக்கக் கூடிய உள மருத்துவர்கள் தமிழ் மக்களின் அவலங்கள் குறித்த உண்மைக் கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றனர். உளமருத்துவர்கள் அண்மைக்காலமாக முன் வைத்து வரும் கருத்துக்கள் தொடர்பில் கவனம் செலுத்துவது மிக மிக அவசியம்.

அதேநேரம் வட புலத்தில் கடமையாற்றும் உள மருத்துவ நிபுணர்களிடம் நாம் வேண்டுவதெல்லாம் எங்கள் இனத்தின் வீழ்ச்சி நிலைகளை தடுத்து எங்கள் மக்களின் வாழ்வியலை ஆரோக்கியமாக்க நீங்கள் உதவ வேண்டும் என்பதுதான்.

வெறுமனே கருத்துக்களை முன்வைப்பதனால் மட்டும் எங்கள் குறைகள் தீர்ந்து விடப்போவதில்லை. மாறாக எங்கள் இனத்தின் எழுச்சி பற்றி நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இருந்தும் எங்கள் அரசியல்வாதிகள் எதுவும் அறியாதவர்களாக; எங்கள் இனத்திற்கு நடந்த கொடுமைகளை மறந்து, மக்களை மீட்டெடுக்கத் தெரியாதவர்களாக இருக்கின்றனர்.

எந்தக் கருத்தைக் கூறினாலும் அவர்கள் அவை பற்றி அலட்டிக் கொள்வதில்லை. எனவே எங்கள் அரசியல் தலைமைகளை நாம் ஆரோக்கியப்படுத்த வேண்டும். அல்லது ஆரோக்கியமான ஒரு புதிய அரசியல் தலைமையை உருவாக்க வேண்டும். இந்த இரண்டில் ஏதாவது ஒன்று நடந்தேற வேண்டுமாயின் உள மருத்துவ நிபுணர்களாகிய நீங்கள் எங்கள் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியை செய்யவேண்டும். அரசியலில் நாங்கள் மிகவும் பஞ்சப்பட்டுள்ளோம். எங்களை சிங்கள ஆட்சியாளர்கள் மட்டும் ஏமாற்றவில்லை. தமிழ் அரசியல்வாதிகளும் கடுமையாக ஏமாற்றுகிறார்கள். எனவே இதற்கொரு முடிவு கட்டாவிட்டால் அரசியல்வாதிகள் தங்கள் பிள்ளைகளை வாழவைத்து எங்கள் பிள்ளைகளை சீரழியவைத்துவிடுவர்.

ஆகையால் உண்மைநிலை அறிந்த உள மருத்துவர்களாகிய நீங்கள், உங்கள் கருத்துக்களை எங்கள் மக்களிடம் விதையுங்கள். ஆரோக்கியமான அரசியல் தலைமை கிடைப்பதற்கு உதவுங்கள்.

## இலவச கல்விக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

புனித ஞானப்பிரகாசியார் அறிவாலயத்தின் ஏற்பாட்டில் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை மாணவர்களுக்கான இலவச கல்விக் கருத்தரங்கு எதிர்வரும் 15ஆம், 16ஆம் திகதிகளில் ஏழாலை கிழக்கு இசிதோர் றோ.க.த.க பாடசாலையில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3மணி வரை நடைபெறவுள்ளது. இவ்வாண்டு க.பொ.த சாதாரண பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டு பரீட்சைக்கு தம்மை தயார்படுத்திக் கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான விபரங்கள் தேவைப்படும் மாணவர்கள் ஏழாலை கிழக்கில் அமைந்துள்ள புனித இசிதோர் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளமுடியும் (இ-7)

## ஓய்வுபெற்ற அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலய பாடசாலைகளில் பணிபுரிந்து 01.07.2008 ஆம் ஆண்டிற்கு பின்னர் ஓய்வுபெற்ற அதிபர்களுக்கான பதவி உயர்வு வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் நேற்றும் இன்றும் காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி வலயக் கல்விப்பணிமனையில் நடைபெறவுள்ளதாக கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் அறிவித்துள்ளார். எனவே ஓய்வுபெற்ற அனைத்து அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு [illegible] கேட்டுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்மயா மிஷனில் இரத்த தான முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சின்மயா மிஷன் ஏற்பாட்டில் இரத்த தான முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி முதல் யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள சின்மயா மிஷனில் இடம்பெறவுள்ளது.(இ-5)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014

"பூமியிலே மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். இதை நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தும்போது பூமியிலுள்ள மிகச்சிறந்த வளங்களில் ஒன்றாக நாம் அவற்றைக் கொண்டிருப்போம்"

*-பிராங்க் லோயிட் ரைற் (அமெரிக்க கட்டக் கலைஞர், எழுத்தாளர்)*

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



**பக்தன்:** பகவான், பெற்றோர்கள் நான் என்ஜினிய் ஆக வேண்டும் எ விரும்புகிறார்கள். இருதயம் அதில் இல்லை. ஆனால் நீங்கள் பெற்றோர் சொற்படி கேட்க என்கிறீர்கள். என்ன செய்வது?

**ஸ்ரீகல்கி:** உன் பெற்றோர் சொற்படி கேட்டு நீ என்ஜினியர் ஆகலாம். அல்லது உன் இருதயம் சொற்படி நீ கேட்கலாம். இந்த இரண்டிலுமே மற்றொன்றை செய்யாத காரணத்தினால் துன்பம் இருக்கும். பெற்றோர் சொல்படி கேட்டால், உன் உணர்ச்சிகள் கீழே தள்ளப்பட்டுவிட்டது போல உணருவாய். அந்த வலியை அனுபவிக்கிறாய். அந்தத் துன்பத்தை அப்படியே ஏற்று அனுபவித்தால் அப்போது அந்த விந்தை நடக்கும். விநோதமான ஓர் ஆனந்தத்தை அனுபவிப்பாய். இதோ பார் வாழ்வில் எப்போதும் உனக்கு வேண்டியதையே அடைய முடியாது. வலிஇருக்கும் அந்த வலியிருந்து தப்பிக்காமல் அதை அனுபவித்தால் அது விநோதமான, ஆனந்தமாக மாறிவிடும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### நடத்தையின் அமைப்பு



ஒரு மனிதன் நல்ல எண்ணங்களையே எண்ணி நற்செயல்களையே செய்து வந்தால் அவன் மனத்தில் நல்லனவையே பதிந்து அவை அவனையறியாமலேயே அதைப்போன்ற நல்லதைச் செய்ய அவனைத்தூண்டும் ஒரு மனிதன் ஏராளமான நல்ல செயல்களையும் ஏராளமான நல்ல எண்ணங்களையும் கொண்டிருந்தால் அவன் உள்ளத்தில் நல்லதையே செய்யவேண்டும் என்ற தவிர்க்க முடியாத போக்கு உண்டாகிறது.

அவனாகத் தீயவற்றைச் செய்யவேண்டுமென்று விரும்பினாலும் நன்மையின் மொத்த வடிவாக உள்ள அவனது மனது அவனை அவ்வாறு செய்யவிடாது. அவன்பூரணமாக நற்சுபாவங்களின் வயப்பட்டு விடுகிறான். இவ்வாறு அமையும் பொழுதுதான் ஒரு மனிதனின் நடத்தையைத் தீர்மானிக்க விரும்பினால் அவனுடைய அருஞ்செயல்களையே காணாதே. ஒரு மனிதனின் மிகச் சாதாரணமான செயல்களையே கண்காணித்து வா. உண்மையில் அவைதாம் ஒரு மனிதனுடைய உண்மையான நடத்தையை உனக்கு வெளிப்படுத்தும்.

# ஸ்கந்தவரோதயா வெற்றி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணம் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

இலங்கை பாடசாலைகள் 13 வயதிற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான கிரிககெட் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இப் போட்டிகள் ஒரு நாள் கொண்ட இன்னிங்ஸ் போட்டிகளாக இடம்பெறுகின்றன.

இதில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையிலான போட்டியொன்று வட்டுக் கோட்டை யாழ்ப்பா ணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயற் சுழற்சியில் வென்ற சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பாடத் தீர்மானித்தது,

இதன்படி முதலில் துடுப்பாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 40.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 60 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

இதில் தனுராஜ் 15 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி சார்பில் டான்சன் 4 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் டனுஷ்ரார் 10 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்சில் துடுப்பாடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி 40.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கஜதீபன் 27 ஓட்டங்களையும் பிருந்தன் 22 ஓட்டங்களையும் கைப்பற்றினர்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் பந்துவீச்சில் சிந்துஜன் 19 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து தனது 2ஆம் இன்னிங்சில் துடுப்பாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி போட்டி நேர நிறைவில் 27 ஓவர்களை எதிர்கொண்டு 6 விக்கெட்டுகளை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதன் படி முதல் இன்னிங்சில் 38 ஓட்டங்களால் முன்னிலை வகித்த சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி போட்டியில் வெற்றி பெற்றது. (க-23)

SPORTS
விளையாட்டுச் செய்திகள்

# தேசியமட்ட உதைபந்தாட்ட போட்டி; யாழ். மானிப்பாய் இந்து வெற்றி



யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி நான்காவது தடவையாகவும் தேசிய மட்ட உதைபந்தாட்டத்தில் வெற்றி பெற்றது.

கடந்தவாரம் இடம்பெற்ற தேசிய மட்ட உதைபந்தாட்டப போட்டிகளிலேயே மானிபபாய் இந்துக் கல்லூரி வெண்கலப் பதக்கத்தை வென்றது.

நீர்கொழும்பு மேரிஸ் டெல்லா கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற 19 வயது ஆண்கள் பிரிவில் போட்டியில் மன்னார் சென்.சேவியர் ஆண்கள் பாடசாலையை வீழ்த்தி இவ் வெற்றியை பெற்றது

முன்னதாக காலிறுதியில மாத்தறை சென் செபஸ்டியன் கல்லூரியுடன் மோதிய மானிப்பாய் இந்துக் கல்லூரி 2:0 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அரையிறுதியில் கொழும்பு சென் பெனடிக்ட் கல்லூரியுடன் மானிப்பாய் இந்துக் கல்லூரி மோதியது.

இரு அணிகளும் சளைக்காது போராடிய போதும் போட்டி நேர நிறைவில் இரு அணிகளும் கோல்களெதனையும் பெறவில்லை.

இதனால் சமநிலை உடைப்பு உதை நாடப்பட்டது.

இதன் போது துரதிர்ஷ்ட யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி 5:4 என்னும் கோல்கள் அடிப்படையில் போட்டியை கொழும்பு சென் பெனடிக்ட் கல்லூரியிடம் இழந்தது.

எனினும் 3 ஆம் இடத்திற்கான போட்டியில் மன்னார் சென்.சேவியர் ஆண்கள் பாடசாலையை வீழ்த்தியது.


இப் போட்டியும விறுவிறுப்பாக இடம்பெற்றது. போட்டி நேர நிறைவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்றிருந்தன.

இதனால்சமநிலைஉடைப்பு உதை நாடப்பட்டது.

இதனை சாதகமாக பயன்படுத்திய யா/மானிப்பாய் இந்துகல்லூரி 3:2 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதன் மூலம் யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி நான்காவது தடவையாகவும் தேசிய மட்ட உதைபந்தாட்டத்தில் வெற்றி பெற்றதோடு இவ்வாண்டு வெண்கலப் பதக்கத்தை சுவீகரித்துக் கொண்டது. (க-23)

# கீர்த்திகன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்ட போட்டி




கொக்குவில் இந்துக் கல்லூரியின் மறைந்த கூடைப்பந்தட்ட வீரன் கீர்த்திகன் ஞாபகார்த்தமாக பாடசாலை அணிகளுக்கிடையிலான கூடைபந்தாட்ட போட்டியில் யாழ்.இந்து சம்பியனாகியது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தட்ட அணியின் ஏற்பாட்டில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப் பந்தாட்ட திடலில் போட்டிகள் இடம்பெற்றன.

இத் தொடரில் ஆண்கள் பிரிவில் 6 அணிகளும் பெணகள் பிரிவில் 4 அணிகளும் பங்கு பற்றியிருந்தன.

ஆண்களுக்கான பிரிவில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணியை வீழ்த்தியே யாழ்.இந்துக் கல்லூரி சம்பியனாகியது.

வருடம் தோறும் நடத்தப்படும் இச்சுற்றுப் போட்டியில் இம்முறையும் யாழ்.இந்து பங்குபற்றியிருந்தது. நடைபெற்ற இறுதிப் போட்டியில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலையை எதிர்தது விளையாடியது.

ஆரம்பம் முதலே யாழ்.இந்துக் கல்லூரி போட்டியை கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

முதல் கால் பாதியில் 25:10 என்னும் புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்த யாழ்.இந்துக் கல்லூரி ஏனைய கால் பாதிகளிலும் அபாரத் திறமையினை வெளிப்படுத்தி மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணியை துவம்சம் செய்து சம்பியனாகியது.

நான்கு பாதிகளையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்த யாழ்.இந்துக் கல்லூரி இறுதியில் 61:33 எனும் புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற போட்டிகளில் யாழ் மாவட்டம் சார்பாக கலந்து கொணடமை குறிப்பிடத்தக்கது. (க-23)

# ஆளுநர் கிண்ண உதைபந்து யாழில் இன்று ஆரம்பம்

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் ஆளுநர் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. இப் போட்டிகளில் வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட 24 அணிகள் பங்கு பற்றவுள்ளன.

இப்போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை வதிரி டயமண்ட்ஸ் விளையாட்டரங்கில் ஆரம்பமாகின்றன.

இதில் இன்று இடம்பெறவுள்ள போட்டிகள வருமாறு.

காலை 7.30 மணிக்கு கரவை சுடர் விளையாட்டுக் கழகம் எதிர் ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழகம், காலை 8.15 மணிக்கு இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகம் எதிர கருணாகரன் விளையாட்டுக் கழகம், காலை 9 மணிக்கு சிவகுமாரன் விளையாட்டுக் கழகம் எதிர் அல்வாய் பாரதி விளையாட்டுக் கழகம், காலை 9.45 மணிக்கு உடுப்பிட்டி இளைஞர் விளையாட்டுக் கழகம் எதிர் நியூட்டன் விளையாட் டுக் கழகம்

காலை 10.30 மணிக்கு அண்ணாசிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகம் எதிர் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம், காலை 11.15 மணிக்கு றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் கலைமதி விளையாட்டுக்கழகம் மாலை 3 மணிக்கு அன்பாலயம் விளையாட்டுக் கழகம எதிர் செஞ்சுடர் விளையாட்டுக் கழகம், மாலை 3.45 மணிக்கு சுடரொளி விளையாட்டுக் கழகம் எதிர் யங்கம் பன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது. வெற்றி பெறும் அணிகளுக்கான காலிறுதிப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணி முதல இடம்பெறவுள்ளதோடு அரையிறுதிப் போட்டிகள் நாளை மாலை இடம்பெறவுள்ளன. இறுதிப் போட்டி புதன் கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளதாக வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கினர் அறிவித்துள்ளனர். (க-23)


# இந்தியா வெற்றி

இலங்கைக்கு எதிரான 2 ஆவது ஒருநாள் போட்டியில் ராயுடு அபாரமாக ஆடி முதல் சதம் அடிக்க இந்திய அணி மீண்டும் வெற்றி பெற்றது. இந்தியா வந்துள்ள இலங்கை அணி 5 போட் டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடுகிறது. முதல் போட் டியில் இந்தியா வென்றது. இரண்டாவது போட்டியில் அகம தாபாத்தில் நேற்று முன்தினம் நடந்தது. டாஸ் வென்று முதலில் பேட் செய்த இலங்கை அணி 50 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 274ஓட்டங்களை எடுத்தது கப்டன். மத்யூஸ் கடைசி வரை ஆட்டமிழக்காமல் 101 பந்தில் 92 ஓட்டங்கள் எடுத்தார். மற்ற வீரர்கள் பெரியளவில் ஓட்டம் சேர்க்கவில்லை.

275 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணி 44.3 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 275 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ராயுடு 121 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். இதன் மூலம் இந்திய அணி தொடரில் 2-0 என்ற முன்னணியில் பெற்றுள்ளது. (க)



# புதிய மைல்கல்லை எட்டினார் சங்கக்கார



சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அதிக அரைசதம் எடுத்தவர்கள் வரிசையில் சங்கக்காரா, தென்னாபிரிக்க வீரர் காலிஸை முந்தியுள்ளார்.

இந்தியாவுக்கு எதிராக நேற்று முன்தினம் ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய சங்கக்காரா தனது ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் 87 ஆவது அரைச் சதத்தை அடித்தார். இதன் மூலம் தென்னாபிரிக்க வீரர் காலிஸை ஓரங்கட்டியுள்ளார். இந்திய ஜாம்பவான் சச்சின் தொடர்ந்து 96 அரைச் சதத்துடன் முதலிடத்தில் இருக்கிறார். இரண்டாவது இடத்திற்கு சங்ககாரா முன்னேறியுள்ளார். காலீஸ்(86), டிராவிட்(83), இன்சமாம் (83), பொண்டிங் (82), ஜெயவர்த்தனே (74) ஆகி யோர் அடுத்தடுத்த இடங்களிலுள்ளனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ வசமுள்ள காணிகளை விரைவில் ஒப்படையுங்கள்!

## வடக்கு மாகாண சபை ஜனாதிபதிக்கு கடிதம்

வடக்கு மாகாணத்தில் இராணுவத்தினர் வசமுள்ள கட்டடங்கள், காணிகளினை இவ்வருட முடிவுக்கு முன்னதாக விடுவிக்குமாறு கோரி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வடக்கு மாகாண சபை கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

வடக்கு மாகாண சபையின் 2014.10.09-ம் திகதிய அமர்வின் போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் (R/17/2014/143) ஆங்கில வடிவத்தினை கீழ்க்கண்டவாறு மீள்பதிவு செய் கிறோம்.

வடக்கு மாகாணத்தில் ஆயுத படைகள் வசமிருக்கும் அனைத்துத் தனியார் காணிகளையும் கட்டடங்களையும் இந்த வருட முடிவுக்கு முன்னதாக அவற்றின் உரிமையாளர்களிடம் விடுவிக்குமாறு ஜனாதிபதியையும் இலங்கை அரசாங்கத்தினையும் வடக்கு மாகாண சபை கோருகிறது.

ஜனாதிபதி அவர்களே! இந்தக்கோரிக்கையை மேற்கொள்ளும் போது இச் சபையானது போர் முடிவுக்கு வந்து ஐந்து வருடங்களுக்கு மேலாகியும் இந்தக் காணிகளினதும் கட்டடங்களினதும் உரிமைகளை மறுப்பது நியாயமற்றதும், அநீதியானதுமான விடயம் எனக்கருத்தில் எடுத்துக் கொள்கிறது.

இந்தக்காணி உரிமையாளர்கள் நலன்புரி நிலையங்களிலும் வாடகை வீடுகளிலும் நண்பர்கள் உறவினருடனுமே இரண்டு தசாப்பதங்களுக்கு மேலாக வாழ்ந்து வருவதைக் குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும்.

இவ்விடயத்தைச் சுட்டிக் காட்டும் ஒரு விடயமாக நாம் பின்வரும் விபரங்களைக் காட்டும் நிரல்களை இத்துடன் இணைக்கின்றோம்.

வலிகாமம் வடக்கு பிரிவின் 28 கிராம அலுவலர் பிரிவுகளில் ஆயுதப்படைகள் வசமிருக்கும் 6 ஆயிரத்து 526 ஏக்கர் தனியார் காணிகள் மற்றும் தங்கள் சொந்தக் காணிகளில் இன்னமும் மீளக்குடியமர்த்தப்படாது சுகாதாரமற்ற நிலையில் 4 ஆயிரத்து 656க்கு மேற்பட்ட உள்ளக இடம்பெயர்வினால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் 3 நலன்புரி நிலையங்கள், தென்மராட்சிப் பகுதியில் உள்ள 10 கிராம அலுவலர் பிரிவுகளில் ஆயுதப் படைகளின் வசமிருக்கும் 16 வீடுகள் மற்றும் 30 காணிகள். எனவே ஆயுதப் படைகளின் வசமிருக்கும் தனியார் காணிகளையும் கட்டடங்களையும் விடுவிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறோம் என அதில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (எ-4)

# யாரும் வரலாம் ரணில் அழைப்பு

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து ஐக்கிய தேசிய கட்சிக்கு எவரும் வந்து போகலாம என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரக் கட்சியில் இருந்து ஐக்கிய தேசிய கட்சிக்கு வந்து விரும்பிய காலம் வரை இருந்து விட்டு மீண்டும் சுதந்திரக் கட்சிக்கு செல்ல சுதந்திரம் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி ஆகிய இரண்டு பிரதான கட்சிகளே நாட்டில் இருந்தன. ராஜபக்ஷ அரசாங்கத்தை துரத்த வேண்டும் என்பது எமது தேவை.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியை அழிக்கும், தேவை எமக்கில்லை. நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை தோற்கடிக்க வேண்டும் எனவும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகத்தில அண்மையில் நடைபெற்ற கூட்டம்ஒன்றில் பேசும போதே அவர் இதனை கூறியுள்ளார். (எ-11)

# ரணில் இல்லை...

பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்ககோனை வெளிநாட்டுக்கு அனுப்பி விட்டு ராஜபக்ஷவினருக்கு மிக நெருக்கமானவரும் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் பொறுப்பதிகாரியுமான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் விக்ரமசிங்கவை பதில் பொலிஸ் மா அதிபராக நியமித்து ஜனாதிபதித் தேர்தலை நடத்த ராஜபக்ஷவினர் தயாராகி வருகின்றனர்.

இதனடிப்படையில் இலங்ககோனை மூன்று மாத மேலதிக பயிற்சிகளுக்காக வெளிநாட்டுக்கு அனுப்பி விட்டு, விக்கிரம சிங்கவை பதில் பொலிஸ் மா அதிபராக நியமித்து தேர்தலை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. (எ-11)

# அமெரிக்கா...

கொள்ளப்பட்டு வரும் விசாரணைக்கு சாட்சியம் அளிக்கும் படிவங்களை வைத்திருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டு, கிளிநொச்சி கிராஞ் சியைச் சேர்ந்த சின்னத்தம்பி கிருஸ்ணராசா என்பவர் இரணைமடு என்னும் இடத்தில் வைத்து பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பிலேயே ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவுக்கான அமெரிக்கப் பிரதிநிதி கீத் ஹாப்பர் டுவிட்டரில் மேற்குறித்தவாறு எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதேவேளை, ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த விசாரணைகளை இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் நிராகரித்து வருகின்றமை தெரிந்ததே. (எ-11)

# மீனவர்களுக்கு...

செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி மாதகலுக்கு அண்மித்த கடற்பரப்பில் 4 படகுகளுடன் கைது செய்யப்பட்ட 16 இந்திய மீனவர்கள், செப்ரெம்பர் 28ஆம் திகதி நெடுந்தீவில் கரையொதுங்கிய 4 இந்திய மீனவர்கள் மற்றும் கடந்த ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி கச்சதீவு பகுதியில் மீட்கப்பட்ட 4 இந்திய மீனவர்கள் அடங்கலாக 24 பேருக்கும் நேற்று வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டிருந்தது. (எ-11)

# அடையாள அட்டைக்கு வருகிறது தடை

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு நீண்ட கால பயணங்களை மேற்கொள்பவர்கள் தேசிய அடையாள அட்டையை கொண்டு செல்வதற்கான கட்டுப்பாடுகள் விதிக்கப்படவுள்ளன.

ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் ஆர்.எம்.எஸ்.சரத் குமார இதனைத் தெரிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டையில் விபரங்கள் சிங்களம் மற்றும் தமிழில் மாத்திரமே காணப்படுவதால் அதனை வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்ல வேண்டிய தேவையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாடுகளுக்கு நீண்ட காலப் பயணங்களை மேற்கொள்பவர்கள் அடையாள அட்டைகளை கொண்டு செல்வது தொடர்பாக கடுமையான நடைமுறைகளை பின்பற்றவுள்ளோம்.

வெளிநாடுகளிலுள்ள தூதரகங்களுக்கு இது குறித்து அறிவுறுத்துவதற்காக வெளிவிவகார அமைச்சுடன் பேச்சுக்களை மேற்கொள்ளவுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

# பங்குச் சந்தை கருத்தரங்கு


கொழும்பு பங்குச் சந்தை அண்மைக் காலமாக உயர் பெறுமதிகளை பதிவு செய்த வண்ணமுள்ளது.

வங்கிகளின் வட்டி வீதங்கள் குறைவடைந்துள்ள நிலையில் கொழும்பு பங்குச் சந்தையில் முதலீடுகளை மேற்கொண்டு சிறந்த இலாபங்களைப் பெற்றுக்கொள்வது எவ்வாறு என்பது குறித்து விளக்கங்களை பெற்றுக்கொள்ளக் கூடிய இலவசக் கருத்தரங்கு யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெறவுள்ளது.

கொழும்பு பங்குச்சந்தை யாழ்ப்பாணக் கிளையின் கேட்போர் கூடத்தில் இன்று காலை 9.30 மணிமுதல் இடம்பெறவுள்ள இக் கருத்தரங்கில் ஆர்வம் உள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# மரண அறிவித்தல்

## சிவகுரு கந்தையா (மதவாச்சி)



காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் ஸ்காபுரோ, கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சிவகுரு கந்தையா அவர்கள் வியாழக்கிழமை (06.11.2014) அன்று கனடாவில் சிவபதம் சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு- மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும், மீனாட்சியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், இராசதுரை, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சரஸ்வதி, காலஞ்சென்ற மணி, தில்லையம்பலம் ஆகியோரின் மைத்துனரும், திரிலோகநாயகி, கணேசலிங்கம், நகுலேஸ்வரி, சிவகலா, நாகேஸ்வரி, யோகேஸ்வரன், செந்தூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுப்பிரமணியம், கல்யாணி, தியாகலிங்கம், சிவயோகேஸ்வரன், செல்வராசா, தயாநிதி, சிந்துஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், சங்கீர்த்தா, ராஜமோகன், ஸ்ரீஜனனி, சிவகுமார் (பசறை), நிஷாந்தி, சயந்தன் (கனடா), மதுசன், சௌமிலா, ரவீன் (பிரான்ஸ்), சுபத்திரா, கஜன் (காரைநகர்), தனுஸ்காந், துளசி, ஜிருசன் (கனடா), ஜனகன், ராகுலன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், அனுஸ்காவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் வெள்ளிக்கிழமை (07.11.2014), சனிக்கிழமை (08.11.2014) ஆகிய இரு தினங்களும் மாலை 5.00 மணி தொடக்கம் 9.00 மணி வரையும் 8911, Woodbine Ave, Markham, On L3R 5G1 என்ற முகவரியில் அமைந்துள்ள Chapel Ridge Funeral Home இல் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மறுநாள் ஞாயிற்றுக்கிழமை (09.11.2014) அன்று காலை 8 மணி தொடக்கம் 11 மணி வரையும் ஈமக்கிரியைகள் நடைபெற்று பின்னர் பூதவுடல் 256, Kingston Rd. Toronto, On M4L 1S7 என்ற முகவரியில் அமைந்துள்ள St.Johns Norway Cemetary & Crematoriam இற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

குறிப்பு:-காரைநகர் தங்கோடையில் உள்ள அவரது இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

கனடா தொடர்புகளுக்கு:
கணேசன் (647)921-0749
யோகன்(416)297-4049
செந்தூரன்(416)305-9249

இலங்கை தொடர்புகளுக்கு:
ராணி 01194-724733758
நகுல் 01194-727439874
ஞானம் 01194-774280765 (காரைநகர்)

பிரான்ஸ் தொடர்புகளுக்கு:
சிவகலா 01194-33954341477

தகவல்: மனைவி, பிள்ளைகள்
தங்கோடை, காரைநகர்.

(சி-8992)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி சம...

ஜனாதிபதியின் வேண்டுகோளை திறந்த நீதிமன்றத்தில் வைத்து விசாரிக்க வேண்டும எனக் கேட்டு உச்சநீதிமன்ற பதிவாளரிடம் தாம் மனு கொடுத்தபோது, விசாரணை ஏற்கெனவே முடிந்துவிட்டதாக அவர் அறிவித்ததாக வழக்கறிஞர்கள் ஒன்றியத்தின் மூத்த உறுப்பினரான சுனில் வடகல தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் வேண்டுகோள் கடந்த புதன்கிழமையன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை அரசாங்க விடுமுறையாதலால், அதற்குள்ளாக ஜனாதிபதியின் வேண்டுகோள் மீது எப்படி விசாரணை நடத்தப்பட்டிருக்க முடியும் என்ற சந்தேகம் எழுவதாக சுனில் வடகல கூறினார்.

ஜனாதிபதியின் மனுவை வெளிப்படையாக திறந்த நீதிமன்றத்தில்தான் விசாரிக்க வேண்டுமே ஒழிய அந்தரங்கமான முறையில் விசாரிக்க கூடாது என அவர் தெரிவித்தார்.

இந்த விசாரணையில் வழக்கறிஞர்கள் தமது வாதங்களை முன்வைக்க போதிய கால அவகாசம் வழுங்கப்பட வேண்டும் என்றும் வடகல தெரிவித்தார்.

ஜனாதிபதியின் வேண்டுகோள் மீதான விசாரணை முடிந்துவிட்டதாக தற்போது தகவல்கள் வந்தாலும், அரசியல் யாப்பின் பிரகாரம் இவ்விவகாரத்தில் மீண்டும் ஒரு விசாரணை நடத்துவதற்கு உச்சநீதிமன்றத்துக்கு அதிகாரம் உண்டு என கொழும்பில் செய்தியாளர் கூட்டம் ஒன்றில் பேசிய வழக்கறிஞர்கள் சங்கத்தின் தலைவர் உப்புல் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

எனவே இது சம்பந்தமாக பரந்துபட்ட அளவில் கருத்துகளை முன்வைப்பதற்கு சட்டவாதிகளுக்கு இடம் வழங்கப்பட வேண்டுமென உச்சநீதிமன்றத்திடம் தான் கோரியுள்ளதாக உப்புல் ஜெயசூரிய தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதி சமர்ப்பித்த வேண்டுகோள் தொடர்பாக எழுத்து மூலமாக கருத்து தெரிவிப்பதற்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் நேற்று மாலை 3 மணியோடு முடிவடைந்துவிட்டதாக உச்சநீதிமன்ற பதிவாளர் எம்.எம். ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி முன்வைத்துள்ள கடிதம் தொடர்பான உயர்நீதிமன்றத்தின கருத்து எதிர்வரும் திங்கட்கிழமை அறிவிக்கப்பட உள்ளது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு மூன்றாவது முறையாகவும் போட்டியிட முடியும் என்ற கருத்தையே உயர்நீதிமன்றம் வெளியிடும் எனக் கூறப்படுகிறது.

இரகசியமாக இதற்கான முனைப்புகள் உயர்நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நீதித்துறையின் உட்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

# சென்னை சென்...

மக்கள் சிவில் உரிமை கழக தலைவராக இருந்து மறைந்தவர் சட்டத்தரணி கே.ஜி. கண்ணபிரான். இவரது நினைவு சொற்பொழிவு சென்னை தியாகராயநகர் வித்யோதயா பள்ளியில் நாளை காலை 11 மணிக்கு நடைபெறுகிறது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு, பாதுகாப்பையும் இறையாண்மையும் காத்தல் என்ற தலைப்பில் நினைவு சொற்பொழிவாற்றுகிறார்.

இது தனிப்பட்ட நிகழ்ச்சி என்பதால் வரும் 9 ஆம் திகதியன்றே சி.வி. விக்னேஸ்வரன் சென்னை வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் திடீரென தனது பயணத்திட்டத்தை மாற்றினார் விக்னேஸ்வரன். அதன்படி சென்னையை நேற்றுச் சென்றடைந்தார்.

வடக்கு மாகாண முதல்வர் வருகையையொட்டி விமான நிலையத்தில் நிருபர்கள் குவிந்திருந்தனர். ஆனால் அவர்களிடம் எதுவும் பேசாமல் விக்னேஸ்வரன் சென்றுவிட்டார். இன்னும் இரு நாட்களுக்கு அவர் சென்னையில்தான் தங்கியிருக்க உள்ளார்.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் தமிழ் நாட்டுக்கு மட்டுமே இம்முறை பயணம் செய்வார் என்றும், டெல்லிக்கு செல்லமாட்டார் என்றும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார். (எ-11)

# ஐ.நா விசாரணை...

திக்கும் செயலாகும் என்றும் ஆணையர் தெரிவித்துள்ளார்.

இந்த புலன் விசாரணைகளுக்கு ஒத்துழைக்குமாறு ஆணைக்குழு திரும்பத் திரும்பக் கோரியபோதிலும் அதனை ஒரேயடியாக இலங்கை அரசாங்கம் நிராகரித்தமையானது, ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நேர்மையை குறைப்பதற்கு பதிலாக இலங்கை அரசாங்கத்தின் நேர்மை குறித்த கவலைகளையே ஏற்படுத்தும் என்று ஆணையர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஐநாவின் புலன் விசாரணைகளுக்கு சாட்சியமளிக்க விரும்புவர்களை தடுப்பது மற்றும் மிரட்டுவது ஆகிய நடவடிக்கைகள், ஐ.நா சாசனத்தை நிலைநிறுத்த விளையும் ஐ.நாவின் உறுப்பு நாடு என்ற வகையில் ஏற்க முடியாத ஒன்று என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் இறுதிப் போரில் இருதரப்பினரும் சர்வதேச சட்டங்களை கடுமையாக மீறியதாக பரந்துபட்ட குற்றச்சாட்டுக்கள் இருக்கும் நிலையில், இலங்கை அங்கு ஒரு சுயாதீனமான புலன் விசாரணை நடைபெறுவதை தொடர்ச்சியாக தடுத்து வருகின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையின் சிவில் சமூக அமைப்புக்களும், மனித உரிமைக் காவலர்களும், தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு, துன்புறுத்தல்களுக்கு உள்ளாவதுடன், ஏனைய வகையிலான மிரட்டல்களையும் எதிர்கொள்வதாகவும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையர் தெரிவித்துள்ளார். அங்கு உருவாக்கப்பட்டுள்ள பயத்தினாலான சுவரானது, ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு மக்கள் சாட்சியமளிப்பதை சந்தேகத்துக்கு இடமின்றி தடுக்கிறது என்றும் ஆணையர் கூறியுள்ளார்.

இந்த விசாரணை நேர்த்தியற்றது என்றும், பாரபட்சமானது என்றும் இலங்கை அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை ஐநா ஆணையர் தவறு என்று கூறி நிராகரித்துள்ளார்.

ஆகவே இந்த விசாரணை தொடர்பில் இலங்கை அரசாங்கம் தம்முடன் ஒத்துழைக்க ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (எ-11)

# நாட்டு மக்...

தேசிய பொருளாதாரத்தை வளர்க்க உருவாக்கப்பட்ட மகிந்த சிந்தனை இன்று அதனை செய்துள்ளதா என்பதை நாம் எமது மார்பில் அடித்து கொண்டு கேட்கவேண்டியுள்ளது.

மகிந்த சிந்தனையில் மதுவுக்கு முற்றுப்புள்ளி என்று குறிப்பிட்டுள்ளது. எனினும் அரசாங்கத்தில் உள்ள சில அமைச்சர்களே நாட்டிற்கு எத்தனோலை இறக்குமதி, மதுபானசாலைகளை வைத்து கொண்டு மதுபரனத்தை விற்பனை செய்து வருகின்றனர்.

மகிந்தவின் அரசாங்கம் கசினோகாரர்களை மாத்திரமே உருவாக்கியுள்ளது. இது கசினோ அரசாங்கம் இன்றுசந்தோஷ உலகம் என்ற கலாசாரத்தை ஏற்படுத்தியுள்ளனர். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையே இதற்கு காரணம்.

எமக்குஇப்படியான ஆட்சியாளர்கள் தேவையில்லை. மக்களின் தேவைகள் மாத்திரமே எமக்கு முக்கியம். மக்களின் தேவைகளுக்காக சகலவற்றையும் அர்ப்பணிக்க வேண்டும். நான் அனைத்தையும் அர்ப்பணிக்க தயாராக இருக்கின்றேன் எனவும் அத்துரலியே ரத்ன தேரர் குறிப்பிட்டுள்ளார. (எ-11)

# நேற்றும் இரு...

54 வய்து மதிக்கத்தக்க பெண்ணொருவரின் சடலமும் பிள்ளையொன்றின் சடலமும் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. குறித்த சடலங்கள் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மண்சரிவினால் காணாமல் போனவர்களைக் கண்டுபிடிப்பதற்காக, பாதிக்கப்பட்ட மக்களின் உதவியை நாட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மனோ பெரேரா தெரிவித்துள்ளார்.

மீட்புப் பணிகளின் போது மீரியபெத்தை கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் உதவியை பெற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார்.

கொஸ்லந்தை மீரியபெத்தை மண்சரிவில் மீட்கப்பட்ட சடலங்களில், அடையாளம் காணப்படாத சடலங்களை டி.என்.ஏ பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு இதில் தற்போது இருவரின் சடலங்கள் அடையாளம், காணப்பட்டுள்ளதோடு, 14 பேர் சரியான தகவல்களையும் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மண்சரிவிலிருந்து மீட்கப்பட்ட அனைத்து உடல்களும் அடையாளம் காண்பதே டீ.என்.ஏ பரிசோதனை முன்னெடுக்கப்படுவதன் நோக்கமென பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (எ-11)


வேலையாட்கள் தேவை

* Photoshop Designer
* தைக்கத் தெரிந்தவர்கள் (T-Shirt கட்டிங் மற்றும் தையல்)

குறிப்பு: யாழ். நகரப் பகுதியில் வசிப்பவர்கள். நாளை நேரில் வரவும்

கோலாசிற்றி 021 320 2787 தொழில் வங்கி
224/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C-8994)

காணி விற்பனைக்கு

உடுவில் தேவாலய வீதியில் அமைந்துள்ள 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு
0772007585
0773629455
(8256)

ஆயிரங்கள் கடந்த பதிவுகள்

நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனை

உங்கள் கல்யாண மாலை

இலவச திருமண சேவையை நாடுங்கள்
உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள
www.kalyanamalai.lk
இணையத்தைப் பாருங்கள்

நிலைய நிர்வாக செலவிற்காக பதிவுக்கட்டணம் 1000 ரூபாய் மட்டுமே

தொடர்பு : கல்யாண மாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021 720 1005
Email :- kalyanamalai.jaffna@gmail.com

THE FIRST TIME யாழ்ப்பாணத்தில் முதல் முதலாக
2880 DPI

Gongzheng Thunderjet Digital Printer
(World Color Digital Technology)
NEW Photo Quality Printing
Jana Digital 0770731654
Photo Quality 40/=
Normal Quality 35/=
• பந்தல் பிறிண்டிங்
• பனர் பிறிண்டிங்
• விளம்பரப் பதாகைகள்
• ஸ்ரிக்கர்கள்
• லைட் பதாகைகள்
Light Board - 1Side - 450/= 2 Side - 500/=
Name Board - 1Side - 160/= 2Side - 230/= 1Side - 210/= 2Side - 320/=
3 வருட உத்தரவாதம்
Sticker Print 70/=
Backlit Print 70/=
ஜனா டிஜிற்றல் பிறிண்டிங்
மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம்.
021 221 3233, 077 073 1654


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org